நல்லதோர் உலகம் அமைப்போம்

# மதி

சமூக வழிகாட்டி

வைகாசி - ஆனி 2016

விலை 65/-

விருட்சம் 1

விதை 2




தேசிய சாதனையில்



யாழினி

சர்வதேச சாதனையில்



டினேஜா

சாதனைகளின் சிகரத்தில்

வேம்படி மகளிர்



கல்விக்காருண்யன்
நாகரத்தினம்




Good Citizen
FAIRNESS HONESTY RESPONSIBILITY

# OUTSTANDING PERFORMERS - '9A' IN G.C.E (O/L) 2015




யா/திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை



தனிஸ்ரிகா இராஜமோகன் -9A



கிறிஸ்ரின் கனுலா மரியதாசன்-9 A

கா.பொ.த சாதரணதரத்தில் 9 A சித்திகளைப் பெற்ற மாணவச் செல்வங்களுக்கும், சித்திபெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# உள்ளே...


உதவும் கரங்கள்
இலட்சியத்துடன் பயணியுங்கள்
ஆன்மீகம் தரும் அதிசய மாற்றங்கள்
வளமான வாழ்விற்கு உணவே மருந்து
சிரித்து வாழ்வோம்
சூழல் பாதுகாப்பு
விஞ்ஞான உலா
மூளைக்கு விவேகம் தரும் கணிதம்
முகப்பருவிலிருந்து விடுதலை
வருமுன் காப்போம்
தன் மதிப்பைக் கூட்டுவோம்.
கவிதைப்பூங்கா
போதையை ஒழிப்போம்
கல்விக்காருண்யன்
சாதனைகளின் சிகரத்தில் வேம்படி மகளிர்
சைவமகாசபையின் செயற்பாடுகள்
மனம் திறந்து பேசுங்கள்
சரித்திரக்கதை
ஆங்கில அறிவை வளர்ப்போம்
தூக்கம் தொலைத்த. நிஜங்கள்
கணினி, தொழில் நுட்பம்
நாட்டார் இலக்கியம்
சதுரங்கம் விளையாடுவோம்
பொதுஅறிவுத் தகவல்கள்
விழிப்புணர்வுக் குறுநாவல்


## சுவாமி விவேகானந்தரின் வீர மொழிகள்

**நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன்.**

- எவனுடைய இதயம் ஏழைகளுக்காக ரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன் மற்றவர்கள் துராத்மாக்களே.
- எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. இது என் உறுதியான நம்பிக்கை
- சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள்.
- தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரம் ஆகும்.
- அளவற்ற பலமும் பெண்ணைப் போல் இரக்கமுள்ள இதயமும் பெற்றவனே உண்மை வீரன்.
- இளைஞர்களே, தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள். சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள்




- உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம்.
- என் குழந்தைகளான நீங்கள் என்னைவிட நூறு மடங்கு சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.
- பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.
- பகை,பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.
- உண்மைக்காக எதையும் துறக்கலாம் ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே.
- இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.

மதி

# உதவும் கரங்கள் பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட உன்னதமானது




வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம் -

எமது இளைய தலைமுறையினருக்கு சிறுவயதிலிருந்தே உதவும் பண்பையும் மனிதநேயத்தையும் வளர்த்தெடுக்கவேண்டும். உதவும் கரங்கள் பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட உன்னதமானது. உதவி செய்ய நாடு, மதம், மொழி, சாதி, கடவுள் என்ற பேதமோ, தடையோ கிடையாது. நாம் அனைவரும் மனிதர்களுக்கு மட்டுமல்ல ஏனைய உயிர்களுக்கும் கூட உதவி செய்ய வேண்டும். உதவி செய்பவர்களைப் பாராட்ட வேண்டும். உதவி செய்தவர்களிடம் நன்றியுடன் நடந்து கொள்ள வேண்டும். செய்த உதவியை உயிர் உள்ளவரை நினைக்க வேண்டும். நாம் மற்றவர்களுக்கு செய்யும் உதவியை காலம் அறிந்து, இடம் அறிந்து, தரம் அறிந்து, செய்ய வேண்டும். உதவியை பொது நலம் கருதி, எதிர்ப்பார்ப்பு இன்றி பிரதிபலன் கருதாமல் செய்தல் வேண்டும். உதவி செய்யும்போது உள்நோக்கம் இருத்தல் கூடாது.



உதவியை தானாக முன்வந்து செய்ய வேண்டும். உதவி செய்ய நினைப்பதே தர்மம் ஆகும். உதவி செய்வது அன்பை வளர்க்கும். உதவி செய்தால் உறவு மலரும். உதவி செய்யும் மனிதரே கடவுளாக மதிக்கப்படுவர். உதவி செய்ய, செய்ய இதயம் மலரும். எண்ணம் உயரும், மனதில் திருப்தி உண்டாகும்.

இந்த உதவி செய்யும் எண்ணம் தான் மானிட வாழ்க்கை. இந்த எண்ணமே மனிதனை உயர்த்தும் மாபெரும் சக்தி. உதவி செய்யும் எண்ணம் இல்லாமல் இருந்தால் நாம் பிறந்ததில் பயன் எதுவும் இல்லை. உதவி செய்யும் எண்ணத்தை நாம் பண்படுத்தி பிறர் நலம் பேணி வாழும் வாழ்க்கையே சிறப்பானதாகும்.

மனித நேயம் தழைக்கும் ஒரு சமூகத்தில் மக்கள் அனைவரும் நற்பண்புடனும் சந்தோசமாகவும் வாழ்வார்கள். புண்ணியத்தை கொடுக்கிற செயல்களை செய்தல் மனித நேயம் ஆகும். எந்த மனிதனிடம் மனித நேயம் அதிகமாக இருக்கிறதோ அவன் உயர்ந்து நிற்கிறான். கடவுளின் கருணையை பெறுகிறான். மனிதநேய மாந்தர்கள் அதிகம் உள்ள நாடுகள் எல்லாவகையிலும் மேலோங்கி நிற்கின்றன.

மனிதநேயம் குறைவாக உள்ள நாடுகளிலே வறுமை, நோய், பஞ்சம், பட்டினி அதிகமாக இருக்கும். பிறருக்கு துன்பம் அளிக்காமல் இருத்தல், மற்றவர்களையும் மதித்து நடத்தல், ஏழைகளின் துன்பத்தைப் போக்குதல், இளகிய இதயமும், இரக்க சுபாவமும் போன்ற நற்பண்புகளே மனித நேயச்செயற்பாடுகள் ஆகும். மனித நேயமற்றவர்களுக்கு மனிதர்களை மனிதராக மதிக்காத தன்மையும், தாழ்ந்தோர், உயர்ந்தோர், ஏழை,பணக்காரன் என்ற பாகுபாடுகள் பார்க்கும் தன்மையும் காணப்படும். “மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று சுவாமி விவேகானந்தர் சொல்லி இருக்கிறார். கோவிலில் உள்ள விக்கிரகத்திலே கடவுளை பார்க்கிறவன் பக்தியின் அடிமட்டத்தில் நிற்கின்றான். ஆனால் ஒரு விதவையின் கண்ணீரை துடைப்பதிலோ, அல்லது பசியோடு இருக்கும் ஒரு ஏழைக்கு உணவளித்து அவன் பசியைப் போக்குவதிலோ, பிறர் துன்பத்தை துடைப்பதிலோ, ஒரு மாணவனின் கல்விக்கு உதவுவதிலோ அவன் கடவுளைக் காண்கிறான். மேலே உயர்ந்து நிற்கின்றான் என்றும் அவர் சொல்லி இருக்கின்றார்.வாழ்க்கை முழுவதும் பிறருக்கு தீங்கும், கெடுதலும் செய்துவிட்டு, ஆயிரம் அன்னதானங்களும், கொடுப்பனவுகளும் , அபிஷேகங்களும், செய்வதில் வரம் கிடைக்கப்போவதில்லை. எனவே மனிதநேயமுடன் வாழ்ந்து இறைவனின் அருளைப் பெறுங்கள்.

ஆசிரியர்

எமது முகவரி-
இல29/5 புகைபிரத நிலைய வீதி,
புங்கங்குளம், அரியாலை
யாழ்ப்பாணம்

தொலைபேசி இலக்கம் - 0215688820
துரித அழைப்பு - 0777806235
மின்னஞ்சல் முகவரி -
mathy1085@gmail.com

# இலட்சியத்துடன் பயணியுங்கள் வெற்றி வாசலை தட்டும்



- ம.அம்மு

நினைப்பது என்பது ஒரு அற்புதமான விடயம். அதுவும் நாம் விரும்புவதை நினைக்கும் போது ஏற்படும் சுகம் இருக்கிறதே அதற்கு ஈடு இணை யில்லை. இவை எல்லாம் நடக்குமா? நடக்காதா என்று நிறைய பேருக்கு கவலைகள் இருக்கிறது. நம் மனத்தின் வலிமை நமக்கே தெரியாது. நீங்கள் உங்களை சக்தியுள்ளவனாக நினைத் தால் சக்தியுள்ளவனாக ஆவீர்கள். நம்மில் நிறையப் பேர் மஜிக் பார்த்திருப்போம். அதனை கண்கட்டு வித்தை என பலபேர் சொல்வார்கள். ஆனால் உண்மையில் அது ஒரு விஞ்ஞானம். அதற்குள் ஆயிரம் விடயங்கள் இருக்கிறது. எல் லாமே மனதின் பயிற்சிதான். அதே போல் நீங்கள் எந்த அளவுக்கு முயற்சி செய்கிறீர்களோ அந்த அளவுக்கு பலனும் உங்களுக்கு வந்து சேரும்.

ஒரு சிறுவன் தன் தாயிடம் சண்டையிட்டுக் கொண்டு மலைமீது ஏறுகிறான். மலை உச்சிக்கு சென்று தாயின் மேல் உள்ள கோபத்தில் உன்னை வெறுக்கிறேன் என கத்துகிறான். பின்னர் அதே சத்தம் எதிரொலியாக உன்னை வெறுக்கிறேன் என்று திரும்பி அவனை நோக்கி வந்தது. இதனைப்பார்த்துப் பயந்த சிறுவன் வேகமாக இறங்கி வந்து தன் தாயிடம் நடந்த வற்றை விபரிக்கிறான். புரிந்து கொண்ட தாய் தன் மகனுக்கு வாழ்க்கையைப்பற்றி விபரிக்கத் தொடங்கினாள்.

நீ யாரை வெறுத்தாலும் வெறுப்புத்தான் வரும். அதே சமயம் அன்பைக்காட்டு உனக்கு அன்பு வந்து சேரும். இந்தக்கதையின் கருத்து என்னவென்றால் நம் வாழ்க்கையும் அந்த எதிரொலியைப்போலத்தான். நீங்கள் எதனை விதைக்கிறீர்களோ அதுதான் உங்களுக்கு கிடைக்கும். ஆகவே நாம் நினைப்பதை திறம்பட நினைப்போம். குறுக்கு வழியில் முன்னேற நினைக்காதீர்கள். உங்கள் எண்ணமும் நேர்மையுள்ள எண்ணமாகத்தான் இருக்கவேண் டும். குறுக்கு வழியில் சிந்தித்தால் அது முதலில் சுகமாகத்தான் தெரியும். ஆனால் போகப்போக

அதுவே உங்களுக்கு முடிவாக அமையும்.

ஒரு காட்டில் அழகிய பறவை இருந்ததாம். அந்தப் பறவை பறந்து உணவு தேடுவதற்கு சோம்பேறித்தனப்பட்டு குறுக்கு வழியில் என்ன செய்வது என்று யோசித்ததாம். ஒரு நாள் ஒரு விவசாயி கூடை நிறைய பழங்களை எடுத்துக் கொண்டு சென்றானாம். இதனைப் பார்த்த அந்தப் பறவை விவசாயிடம் எங்கே எடுத்துச்செல்கிறாய் என்று கேட்டதாம். அதற்கு விடைகூறிய விவசாயி இதனை விற்று நான் இறகுகளை வாங்கப் போகிறேன் என்றாராம். நான் என்னுடைய இறகுகளை தருகிறேன் எனக்கு இரண்டு பழங்களை தருவாயா என பறவை கேட்க விவசாயி சந்தோசமாக பழங்களை கொடுத்து இறகுகளை வாங்கினான். முயற்சித்து உணவு தேடாமல் பழங்களை விவசாயிடம் வாங்கி இறகு கொடுத்த பறவை நாளடைவில் இறகுகளை இழந்து பறக்கமுடியாமல் போனது.

நீங்கள் நினைத்ததை சாதிக்க முடியுமா என்று முதலில் சிந்தியுங்கள். பல வழிமுறைகளை சிந்தித்து பின் அது நடைமுறைக்கு ஒத்து வருமா என்று பார்த்த பின்னர் நினைக்கத் தொடங்குங்கள். தமக்குள் பல சக்தி இருக்கிறது என்று தெரிந்தும் அதனைப் பயன்படுத்த தெரியாதவர்கள் உயிர் இருந்தும் உயிரற்ற சடப்பொருளுக்கு சமனாவர். எதனையும் ஏனோ தானோ என்ற விட்டு விடாமல் முயலுங்கள்.



## கழுகைப்போல இருங்கள்

வானத்தில் பறக்கும் கழுகானது எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் தனது உணவைச் சரியாகப் பார்த்து கொத்திச் சென்று விடும். நீங்களும் உங்கள் இலட்சியத்தின் மீது உங்கள் மொத்தப் பார்வையையும் செலுத்த வேண்டும். உங்கள் எண்ணமும் பார்வையும் ஒரே பாதையில் ஒரே வேகத்தில் செல்லும் போது உங்கள் இலட்சியத்தை தவிர வேறு எதுவும் உங்கள் கண்ணுக்கு தெரியாது. அந்த நேரத்தில் உங்கள் தன்மைகளும் மாறும். எப்படி மழைத்துளி மண்ணின் குணத்திற்கு ஏற்றாற் போல மாறுகிறதோ அதுபோல நம் தன்மையும் மாறும்.

# Auto suggestion கொடுங்கள்

உங்களுடைய இலட்சியப்பாதைக்கு உங்களை நீங்களே தயார் செய்து கொள்ள வேண்டும். அதற்கு உங்கள் மனதை தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். தினமும் காலையில் எழுந்தவுடன்

- நான் எல்லோராலும் கவரப்படுவேன்
- நான் எடுத்த காரியத்தை முடிப்பேன்.
- என் மனதை ஒருமுகப்படுத்துவேன்.
- என் மனதை ஒருபோதும் தளர விடமாட்டேன்.

என உங்களுக்குள்ளே கூறிக்கொண்டே இருங்கள். அதன் விளைவுகளைப் பாருங்கள். உங்களை அறியாமல் உங்கள் மனது மாற ஆரம்பிக்கும்.

ஒரு லென்சின் மூலமாக சூரிய ஒளியை ஒரு பேப்பரில் மாறிமாறி வைத்தால் அது எரியாது. ஆனால் ஒரே இடத்தில் கொஞ்சநேரம் வைத்துப்பாருங்கள். அந்தப் பேப்பர் எரிய ஆரம்பித்துவிடும்.

Cricket ஆட்டத்தில் Target என்று ஒன்று உண்டு. அது தெரிந்து விட்டால் அதன் பின்னர் விளையாடி Target இனை அடைவது இலகுவாகும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலக்கு இருக்கும். அதனை மனதில் நினைத்து அதனை அடையும் வழியை நோக்கிச் செல்லுங்கள்.

மற்றவர்கள் நம்மை கேலி செய்வார்கள் என்று எண்ணிப் பதறாதீர்கள். இலட்சியத்தை ஒருபோதும் சிதறடித்துவிடாதீர்கள். ஒரு வீட்டைக்கட்ட ஆரம்பித்தால் முதலில் அஸ்திவாரத்திலிருந்து ஆரம்பித்து படிப்படியாக கட்டி முடிப்போம். அதனைப்போலவே கால அவகாசத்தை ஏற்படுத்தி செயற்பட்டு வெற்றி காண வேண்டும். வெற்றியை அடைய கொள்கையோடு வாழுங்கள். கொள்கையற்ற வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடும். எமது கொள்கைகளை அடைவதற்கு தியாகங்களும் அத்தியவசியமானது. நீங்கள் நினைத்ததை அடைய பல இடர்களை அடையலாம். அப்பொழுது எல்லாம் நன்மைக்கே என்று எடுத்துக்கொண்டு காரியங்களை சிறப்பாக செய்யுங்கள். ஒவ்வொரு தோல்வியிலும் ஒவ்வொரு விடயத்தை கற்றுக்கொள்ளுங்கள். கண்டிப்பாக நான் வெற்றி பெற்றே தீருவேன் என்கின்ற எண்ணம் காட்டுத்தீ மாதிரி உங்கள் மனதில் எரிந்து கொண்டே இருக்க வேண்டும். எப்பொழுதெல்லாம் தீ அணையப்பார்க்கிறதோ அப்பொழுதெல்லாம் வெற்றியில் நம்பிக்கை என்ற எண்ணையை அதில் ஊற்றுங்கள். வெற்றி உங்கள் வசமே.

உலகின் பிரபல மூளை இயல் நிபுணரும் விஞ்ஞானியுமான ஆண்ட்ஷரூ நியூபெர்க் தனது அதிசய ஆராய்ச்சிகளின் மூலம் ஆன்மீகவாதிகளுக்கு ஒரு அற்புதமான செய்தியை அளித்துள்ளார்.இறை நினைவு ஏற்படும்போதெல்லாம் மூளையில் அதிசயத்தக்க விதத்தில் மாறுதல்கள் ஏற்பட்டு பல நல்ல விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பது தான் அது!

ஆறு பகுதிகளில் அதிசய மாறுதல்கள் ஏற்படுவதாக குறிப்பிடுகிறார்.




தியானம் அல்லது ஆன்மீக உணர்வுகள் மேம்படும்போது மடல்கள் ஒரு வலிமை வாய்ந்த உணர்வை அனுபவிக்க வைக்கின்றன. இரத்த ஓட்டத்தினால் முன் மடல் மேலே செல்வதற்குப் பதிலாக கீழே செல்கிறது! இதன் மூலம் அவர்கள் கூறும் அல்லது அனுபவிக்கும் அற்புத அனுபவங்கள் உண்மையே என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது. இறை நினைவு அனைத்து மதத்தினருக்கும் ஏற்றம் தரும்

ஆச்சரியமான விடயம் என்னவெனில் இறைவனைப் பற்றி நினைக்க ஆரம்பிக்கும் போதே மூளையில் வெவ்வேறு சர்க்யூட்டுகள் உருவாகின்றன. இந்து, புத்த, யூத, கிறிஸ்தவ, இஸ்லாம் மதத்தில் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் இது ஏற்படுகிறது.

அறிவியல் உணர்த்தும் ஐந்து பேருண்மைகள்

பிரான்ஸிஸ்கன் நன்கள் மற்றும் புத்த குருமார்களை நான்கு வருட காலம் சிறப்பாக ஆய்வுக்குட்படுத்திய பின் ஆண்ட்ஷரூ பின்வரும் உண்மைகளைக் கண்டறிந்தார்.

1) மூளையின் ஒவ்வொரு பகுதியும் கடவுள் பற்றிய வெவ்வேறு கருத்தை அமைத்துக் கொள்கிறது. அதிகம் தியானிக்கத் தியானிக்க கடவுள் இன்னும் அதிகமாக மர்ம புருஷராகிறார்

2) கடவுள் பற்றிய அமைப்பை ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு விதமாக அமைத்துக் கொள்வதோடு, கடவுளுக்கு வெவ்வேறு குணநலன்களையும், மதிப்பையும், அர்த்தத்தையும் கற்பித்துக் கொள்கிறான்.

3) மத நம்பிக்கையே இல்லாவிட்டாலும் கூட ஆன்மீகப் பயிற்சிகளை ஒருவர் மேற்கொள்ளும்போது உடல் நலமும் உள நலமும் மேம்படுகிறது.

4) நீண்டகால தியானப் பயிற்சி மூளையின் அமைப்பையே முற்றிலுமாக மாற்றி விடுகிறது. இது மூட் எனப்படும் மனநிலையை சீராக ஒரே மாதிரி இருக்கும்படி செய்கிறது. ஆன்மீக அறிவை ஏற்படுத்தி புலன் உணர்வுகளை நன்கு உருவாக்குகிறது.

5) சாந்தி, சமூகம் பற்றிய விழிப்புணர்வு. தயை ஆகியவற்றிற்கு ஆதாரமான குறிப்பிட்ட மூளை சர்க்யூட்டை அதற்குரிய பகுதியில் வலிமைப் படுத்துகிறது.

கடவுளை இடைவிடாது நினைக்க நினைக்க அவர் உங்கள் மூளையை நிச்சயம் மாற்றிக்கொண்டே வருகிறார்.இப்படி ஆழ்ந்த ஆன்மீக அனுபவத்தில் நம்பிக்கை கொண்டவர்களே அதிக நோபல் பரிசுகளை சமாதானத்திற்காகப் பெற்றதை அவர் சுட்டிக் காட்டுகிறார்.மார்ட்டின் லூதர் கிங்.,பிஷப் டெஸ்மாண்ட்டுடு. தலாய் லாமா, மதர் தெரஸா ஆகியோர் உலக அமைதிக்காகப் பாடுபட்டதற்கு அவர்கள் உலகின்பால் கொண்டுள்ள அதீத தயை உணர்ச்சியே ஆகும்.

ஆன்மீகவாதிகளுக்கு அறிவுத் திறன், தகவல் தொடர்புத் திறன், படைப்பாற்றல் திறன் ஆகிய மூன்றும் அபரிமிதமாக செழிக்கிறது. இறுதியாக அது ஆன்மாவை அறியச் செய்கிறது

ஒழுங்கான முறையான விரதம், தியானம், பிரார்த்தனை, வழிபாடு, இதர மதச் சடங்குகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் போது அன்றாட உலகில் போட்டிக்கு ஈடு கொடுத்து உயிர் வாழ்ந்து வாழ்க்கையை நடத்துவது.உடலை ஆரோக்கியத்துடன் தக்க வைத்துக் கொள்வது ஆகியவற்றை மூளை சிந்திக்கிறது. எனவே ஆன்மீகத்தை நாடி இறை ஆசி பெற்று நற்பண்புள்ள ஒழுக்கசீலர்களாக வாழ்ந்து எம் மூளைத்திறனை விருத்தி செய்து எதிர் காலத்தை காப்போமாக.

# வளமான வாழ்விற்கு இயற்கை உணவே மருந்து

**வாழைப்பழம்**

எல்லா நேரத்திலும் விரும்பக்கூடிய மற்றும் அனைவராலும் வாங்கக்கூடிய வாழைப்பழம் வருடம் முழுவதும் கிடைக்கக்கூடிய பழமாகும். இது பல நோய்களைக் குணமாக்கக்கூடிய தன்மையுடையது. வாழைப்பழம் போதுமான சக்தியினை அளிக்கின்றது. இதில் அதிக நார்ச்சத்து மற்றும் சுக்ரோஸ், ப்ரக்டோஸ், குளுக்கோஸ் போன்ற இயற்கை சர்க்கரைப் பொருட்



கள் உள்ளது. வாழைப்பழம் சில உடல் நலக்கோடு கள் ஏற்படுவதை தடுக்கிறது

•**மனஅழுத்தம்** - வாழைப்பழத்தில் ஒருவகை புரதம் உள்ளது. நம் உடல் இப்புரதத்தினை செரடோனன் எனும் வேதிப்பொருளாக மாற்றுகிறது. இப்பொருள் மனதை தளர்வாகவும் சந்தோஷமாகவும் வைத்துக் கொள்ள உதவுகிறது.வாழைப்பழத்தில் உள்ள விற்றமின் பி6 இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை சரிப்படுத்துகிறது. இது ஒருவரின் மனநிலை யினை மாற்றச் செயல்படுகிறது.

•**இரத்த சோகை** - வாழைப்பழத்தில் அதிகளவு இரும்புச்சத்து உள்ளது. இது, இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் உற்பத்தியை அதிகரிக்கிறது. இது இரத்தசோகை நோயை தவிர்க்க உதவுகிறது.

•**இரத்த அழுத்தம்** - வாழைப்பழத்தில் அதிகளவு பொட்டாசியம் தாதுப் பொருளும் அதே வேளையில் குறைந்த உப்பும் உள்ளது. எனவே இரத்த அழுத் தத்தை குறைக்க இது தகுந்த உணவாகும்.

•**மலச்சிக்கல்** - வாழைப்பழத்தில் உள்ள அதிக நார் சத்தானது மலச்சிக்கல் பிரச்சினையை தீர்க்க உதவுகிறது மற்றும் சாதாரணமாக எவ்வித கஷ்டமுமின்றி மலம் கழிக்க உதவுகிறது.

•**நெஞ்செரிச்சல்** - வாழைப்பழத்தில் இயற்கையா கவே நம் உடலில் உள்ள அமிலத்தை சமமாக்கும் தன்மை உள்ளது. இது நெஞ்செரிச்சலிலிருந்து நல்ல நிவாரணம் தர உதவுகிறது.

•**அல்சர் எனப்படும் வயிற்று மற்றும் குடல்புண்** - வாழைப்பழம் மென்மையாகவும் வழுவழுப்பாகவும் இருப்பதால், இது குடலில் ஏற்படும் கோளாறு உள்ளவர்களுக்கும், நல்ல உணவாக பயன்படுகிறது. வாழைப்பழம் அதிக அமிலத்தன்மையைச் சரிசெய்வதோடு, புண் ஏற்பட்ட இடத்தில் ஒரு பாதுகாப்பு சுவரை ஏற்படுத்துகிறது.

•**ஸ்ட்ரோக்** - வாழைப்பழத்தினை உணவில் ஒருபகுதியாக தவறாமல் எடுத்துக்கொள்வதினால் ஸ்ட்ரோக் ஏற்படும் ஆபத்தினை தவிர்க்கிறது.

**பொன்னாங்கண்ணி**

இதில் பல ஊட்டச்சத்துக்கள் உள்ளன. நீர்ச்சத்து, கொழுப்புச்சத்து, இரும்புச் சத்து, கல்சியம், பொஸ் பரஸ், புரதம், விற்றமின் ஏ, சி கனியுப்புக்கள் போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளது.

உடல் பொன்போல பளபளப்பாகும் என்பதால் கீரைகளின் ராணி என்று சொல்லத்தக்க கீரை பொன் னாங்கண்ணியாகும். பல பல மருத்துவக் குணங்களை கொண்டது.

**பலன்கள்**

•கண்பார்வைக்கு மிகவும் நல்லது.

•சருமத்துக்கு மிகவும் நல்லது.



•மூல நோய், மண்ணீரல் நோய்களை சரிப்படுத்தும் ஆற்றல் உடையது.

•ரத்தத்தைச் சுத்திகரிக்கும்

•உடலுக்குப் புத்துணர்ச்சியைத் தரும்.

•வாய்த் துர்நாற்றத்தை நீக்கும்.

•இதயத்திற்கும் மூளைக்கும் புத்துணர்வு ஊட்டும்.

இக்கீரையின் சாறு எடுத்து நல்லெண்ணையுடன் சேர்ந்து தைலம் காய்ச்சி தலைக்குத் தேய்த்துக் குளித்து வர கண் எரிச்சல், உடல் உஷ்ணம் போன் றவைகள் நீங்கி உடல் குளிர்ச்சிப் பெறும்.

- பொ.ஜீவனா, ஆசிரியை

வாழ்கையில் ரெண்டு விசயத்த எப்பவும் மறக்கக் கூடாது.

1. விரும்பி எது வந்தாலும் "TAKE CARE"
2. விலகி எது போனாலும் "DONT CARE"

அவர் : நேத்து உங்க காருக்கு எப்படி ACCIDENT ஆச்சு..?

இவர் : அதோ, அங்கே ஒரு மரம் தெரியுதா..?

அவர் : தெரியுது...

இவர் : அது நேத்து எனக்கு தெரியலை..!

"உன் மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா?!"

"நல்லா இருக்கே கதை. நானே ஒப்புக்கிட்ட, அப்புறம் போலீஸ் எதுக்கு, வக்கீல் எதுக்கு, இந்த கோர்ட்தான் எதுக்கு? கண்டுபிடிங்க, அதுக்குதானே இருக்கீங்க!"



கழுதை: என் முதலாளி என்னை ரொம்ப அடிக்கிறான்.

நாய்: அப்ப எங்கேயாவது ஓடிபோக வேண்டியதுதானே?

கழுதை: அப்படிதான் நினைத்தேன், ஆனா, முதலாளி பொண்ணு படிப்புல எப்ப மார்க் குறைவா வாங்கினாலும்" இந்த கழுதைக்குதான் உன்னை கட்டிவைப்பேன்" என்று சொல்கிறான்; அதான் கொஞ்சம் வெயிட் பண்றேன்.

நம்பிக்கை தான் வாழ்க்கை

மாணவன் 1 : "எனக்கு எக்ஸாம்ல ஒரு கேள்விக்கும் பதில் தெரியல. வெறும் பேப்பரை மடிச்சிக்கொடுத்துட்டு வந்துட்டேன்."
மாணவன் 2 : "எனக்கும் பதில் தெரியாம, நானும் வெறும் பேப்பரை தான் மாயா கொடுத்துட்டு வந்தேன்..."
மாணவன் 1 : "அடப்பாவி..டீச்சர் பார்த்தா ரெண்டு பேரும் காப்பி அடிச்சோம்னு நினைக்கப் போறாங்க"



தவறுகளையெல்லாம் கண்டும் காணாமலும், அவர்களை நல்வழிக்கு கொண்டுவர முயல்கிறார் நதியா. இப்படி ஆட்டம் பாட்டமாக போய்க்கொண்டிருக்கிற கதையில் சின்னதாக ஒரு காதல் நுழைகிறது. புதிதாக வந்து சேரும்

உதவாக்கரை மாணவர்கள் ஒற்றுமையாக செயற்பட்டு இழந்த பள்ளி கௌரவத்தை எப்படி மீட்டுகிறார்கள் என்பது தான் பட்டாளத்தின் கதை!

ஒரு பள்ளியில் இரண்டு கோஷ்டிகள். இந்த இரு கோஷ்டிகள் எப்போதும் பார்த்தாலும் மோதலைச் சந்திக்கின்றது. அவர்களது

கிருபாவை காதலிக்கிறான் அருண். அதே வேளையில் எதிர் கோஷ்டியிலுள்ள இர்பான், கிருபாவை தன்னுடைய இறந்துபோன தங்கையாக நினைத்து பழகுகிறான். இதை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் அருண், உடனே இர்பானை கொலைசெய்ய முயலுகிறான். இப்படி

வன்முறையை கையாளும் அருணின் செயலால் நிகழும் விபரீதம்தான் க்ளைமாக்ஸ். நதியா அளவான கோபம், அழகான அறிவுரை என ஒவ்வொரு காட்சியிலும் மின்னுகிறார். இந்த படத்தின் மூலம் மாணவர்களை அடித்து, துன்புறுத்தி, அதன் மூலம் டிஸ்மிஸ் ஆகி, தன் பேச்சால் துன்புறுத்தும் நம் பள்ளி பருவத்து சில ஆசிரியர்களை கண்முன் நிறுத்துகிறார் இயக்குநர். அத்துடன் பசுமை நிறைந்த பள்ளிப்பருவ காலத்திற்கு கூட்டிச்சென்று மாணவர்களின் குறும்புகளையும், சுட்டித்தனங்களையும் யதார்த்தத்துடன் செதுக்கி கண்முன் காட்சிப்படுத்தியிருக்கிறார் இயக்குநர்

- சினிமா

# சூழலைப் பாதுகாத்து சுகதேகியாக வாழ்வோம்

உலக சூழல் தினம்- ஜீன் 5

இயற்கை என்பது நமக்குக் கிடைத்த வரம், அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரம். இயற்கைக்கு மனிதனைப் போன்று சுயநலமில்லை. அனைத்திலும் பொதுநலம் பார்க்கும் இயற்கையானது நமக்கு தூய காற்றையும், நீரையும் வழங்குவதோடு உணவு, உடை, உறைவிடத்திற்குத் தேவையான அத்தனை மூலப் பொருட்களையும் நமக்கு வழங்கி நம்மை வாழ்விக்கிறது.




இவ்வாறு நமக்கு உதவி வரும் இயற்கையை நாம் காக்கிறோமா? என்றால் இல்லை.

தற்போது கணினியும், ஆடம்பரத்திற்குத் தேவையான உபகரணங்களும் பெருகி உள்ளதால் இதனைப் பயன்படுத்தும் போது சுற்றுச்சூழல் பாதிக்கப்படுமே என்று எத்தனை பேர் அறிந்து செயல்படுகிறோம் என்று தெரியவில்லை.

இயற்கை அழிந்தும், சுற்றுச் சூழல் நாளுக்கு நாள் பாதிப் படைந்தும் வருவதால் பாதிக்கப் படுவது நம்மைச் சார்ந்தவர்களும், எதிர்காலச் சந்ததியினருமே ஆகும்.

ஐம்பூதங்கள் எனப்படும் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் போன்றவை, உலகின் உயிர்கள் நிலைத்தும், நீடித்தும் வாழ்வதற்குத் தேவையான அனைத்தையும் உருவாக்கித் தருகிறது. 19ம் நூற்றாண்டிலும், இதற்குப் பிறகு நடந்த உலகப் போர்கள், தொழிற்புரட்சி, பொருளாதாரத்திலும் இதன் வளர்ச்சியிலும் ஏற்பட்ட பின்னடைவுகள் போன்ற நிகழ்வுகள், உலக நாடுகளை மிகவும் பாதிப் படையச் செய்தது. இதனால் அவர்கள் அனைவரும் காடுகள், கனிம வளங்கள், நீர், நிலம், காற்று என்று இயற்கை வளங்கள் ஒன்றையும் விடாமல் சுரண்டினர்.

இதன் பாதிப்புகள் கொஞ்சம் கொஞ்சமாக நம்மை நெருக்கடிக்குள்ளாக்கி உள்ளன. தற்போது அமில மழை, பாலைவனமாதல், உலக வெப்பநிலை மாறுபாடு, ஓசோன் படலம் பாதிப்பு, கதிரியக்கம், உயிர்களின் அழிவு போன்றவை மனிதர்களுக்குப் பெரும் சோதனையாகிவிட்டன. நேற்றைய இயற்கை அழிவிலிருந்து உலகினை மீட்டெடுக்கவும், இன்றைய இயற்கை அழிவிலிருந்து உலகைப் பாதுகாக்கவும், நாளைய அல்லது எதிர்கால உலகில், இயற்கை வளங்களினால் மனித சமூகத்துக்குக் கிடைக்கும் நன்மைகளில் பற்றாக்குறை ஏற்படாத வண்ணம் சமாளிக்கவும், ஆக்கப்பூர்வமான சுற்றுச்சூழல் பாதுகாப்பு அவசியம்.

### சுற்றுச்சூழல் மாசும் இதனால் ஏற்படும் பாதிப்புகளும்:

சுற்றுச்சூழல் மாசுபடுவதற்கான காரணங்களை ஆராய்ந்தால், மக்கள் தொகைப் பெருக்கம்,நவீன அறிவியல் வளர்ச்சியினால் குறுகிய கால வேளாண்மை, தொழிற்சாலைகள் மற்றும் நகரங்களின் உருவாக்கம், போக்குவரத்தினால் ஏற்படும் மாறுதல்கள் போன்றவற்றால் சுற்றுச்சூழல் முக்கிய அங்கங்களாகிய இயற்கை வளங்கள் (நிலம்,நீர்,காற்று) பாதிக்கப் பட்டன.

### காற்று மாசு:

நம் வாழ்வே சுவாசத்தில் தான் அடங்கி உள்ளது. எனவே காற்றில் கலந்துள்ள நச்சுக் களையும் அவற்றினால் ஏற்படும் தீமைகளையும் பார்ப்போம்.

**நைட்ரஜன் ஒக்சைட் வாயு** – சுவாசக் குழாய், நுரையீரல் பாதிப்பு

**சல்பர் ஒக்சைட் வாயு** - இதய உபாதை, தலைவலி, வாந்தி

**காபன் மொனாக்சைட்** – ஒக்சிஜனை கெடுத்து ரத்தப் பண்பு குறைத்தல்

**அமோனியா** – மூச்சுக் குழாய் புண்

**நைட்ரஜன் சல்பேட்** – கண், தொண்டை எரிச்சல், மயக்கம்

**நைட்ரோ பினால்** – இரத்தப் புற்றுநோய்

### நீர் மாசுபாடு:

நீரின்றி அமையாது உலகு' நம் வாழ்வாதாரம் நிலத்தடி நீர். இது பயன்பாட்டுக்கு ஏற்றதாக இல்லாமல் மாசுபட்டு ஊறு விளைவிக்கும் வகையில் இருக்கிறது. இதை நீர் மாசு என்கிறோம். மாசுபட்ட நீரை, அதன் வாசனை, சுவை, கலங்கல், நிறம் ஆகியவற்றின் மூலம் உணரலாம். நாம் அனைவரும் நிலத்தடி நீரையே சார்ந்து வாழ்கிறோம். ஆனால் இந்நீர் கசிவுக் குழிகள், ஆழமில்லாத சாக்கடைக் குழிகள், தொழிற்சாலைகள், உரக்குவியல், பூச்சிக்கொல்லித் தொழிற்சாலைகள், பெட்ரோலிய சுத்திகரிப்புகள், உருக்காலைகள், வேதியியல் தொழிலகங்கள் போன்ற காரணிகளால் பாதிப்படைந்துள்ளன.

### மண் மாசு

'மண்' என்ற சொல்லுக்கு புவி மூலப்பொருள் என்பது பொருள். கழிவு நீர் வாயுக்கள், கனிமங்களின் சிதைவு, வாகனக் கழிவுகள், பிளாஸ்டிக் தொழிற்சாலைக் கழிவுகள், மரத்தூள் போன்றவை மண்ணை மாசுபடுத்துகின்றன. மண்ணில் படிந்த மாசுக்கள் நச்சுக்களாக மாறுகின்றன. இது உணவுச் சங்கிலியால் பல்வேறு உயிரினங்களுக்கு உணவாக உட்கொள்ளப்படுவதால் நம்மால் அறிய முடியாத பல அபாயங்களை சந்திக்க நேரிடுகிறது.

### கடல் மாசு

உயிரினங்களின் தோற்றம் கடல் தான் என்ற ஒரு கூற்று நிலவுகிறது. உலகின் முக்கால் பகுதி நீரால் சூழப்பட்டது. இக்கடலால் நாம் பல வளங்களைப் பெற்று வந்தாலும் இதற்கு ஆபத்தை தொடர்ந்து நாம் விளைவித்தே வருகிறோம். வீட்டு கழிவுகள், குப்பை கூழங்கள், வேளாண்மை கழிவுகள், தீங்குயிர் கொல்லிகள், பாதரசம் போன்ற கன உலோகங்கள், பெற்றோலியக் கழிவுகள், கதிரியக்கக் கழிவுகளின் குவிப்பு இவைகளின் கலப்பால் கடல் மிக மோசமான பாதிப்பிற்கு உள்ளாகி வருகிறது. இதனால் கடல் வாழ் உயிரினங்கள் ஆபத்திற்குள்ளாகின்றன. இதனை நம்பி வாழும் மீனவர்களின் வாழ்வும் கேள்விக்குறியாகி விடுகிறது.

### கதிர்வீச்சின் பாதிப்பு:

புறஊதாக்கதிர்கள், காஸ்மிக் கதிர்கள், நுண் அலை, கட்புலக் கதிர்கள் போன்ற கதிர்வீச்சுகள் சுற்றுச்சூழலைக் கெடுக்கும் முக்கிய காரணிகளாகும். இக்கதிர்கள் மனிதர்களின் மரபணுவையே பாதிக்கும் அளவிற்குக் கொடியது. அணுகுண்டு, நைட்ரஜன் குண்டு, அணுக்கரு ஆற்றல் தொழில் நுட்பங்களின் விளைவாகச் சுற்றுச் சூழலைக் கதிர்வீச்சு மாசுபடுத்துகிறது.

கதிர்வீச்சினால் சுரங்கப் பணியாளர்கள் உள்ளிட்டோர் மிகவும் அதிகமாகப் பாதிக்கப் படுகின்றனர். இக்கதிரியக்க மாசு பாட்டால் குறைப்பிரசவம், செத்துப் பிறத்தல், பிள்ளைப்பேறு குறைதல், கண்புரை, வாய்ப் புண், இரத்தக் குழாய் பாதிப்பு, சருமத்தில் செம்புள்ளிகள், இரைப்பைக் குடல் பாதிப்பு, இரத்தப் போக்கு, எலும்பு மச்சை பாதிப்பு வயதுக்குப் பொருந்தாத மூப்பு, ஆயுள் குறைப்பு போன்ற எண்ணற்ற குறைபாடுகளும் அவதிகளும் ஏற்படுகின்றன.




- வி.மந்தாயினி

# சமூக வாழ்வில் விஞ்ஞான விளக்கங்கள்



- தி.பிரசாயினி,
ஆசிரியை

1.பொலித்தீன் பாவனை குறைக்கப்பட்டு கடதாசிகளின் பாவனை அதிகரிக்கப் படுவதற்கான காரணம்

பொலித்தீன் உக்கலடைவதில்லை. இதனால் நிலம் மாசடைகிறது. பொலித்தீன் எரிக்கும் போது கந்தகவீரொட்சைட் போன்ற வாயுக்கள் வெளியேறுவதால் வளி மாசடைகிறது.

2.தீயணைப்பதற்கு காபனீரொட்சைட் வாயு பயன் படுத்தப்படுகிறது.

எரியாத வாயு, தகனத் துணையிலி, வளியை விட அடர்த்தி கூடியது என்பதால் எரியும் பொருளின் மீது படிந்து வளியைத் தடை செய்கிறது.

3. எமது கண்களை பல கோணங்களில் சுற்றக் கூடியதாக இருத்தல்

ஒவ்வொரு கண்களிலும் ஆறு கட்தசைகள் காணப்படுகின்றன. இத்தசைகளின் தொழிற்பாடு காரணமாக கண்ணை பல கோணங்களினூடாக அசைக்கலாம்.

4.இருட்டறையில் வைக்கப்பட்டுள்ள தாவரங்கள் ஜன்னலை நோக்கி வளைந்துள்ளது.

தாவரங்கள் ஒளித்தொகுப்பு செய்வதற்கு சூரியஒளி அவசியம். போட்டியைத்தவிர்த்து சூரிய ஒளியை உச்ச அளவில் பெற்றுக்கொள்வதற்காக ஜன்னலை நோக்கி வளையும்.

5. காலைக்கூட்டத்தின் போது பாடசாலையில் ஒரு மாணவன் நீண்ட நேரம் அசைவில்லாமல் ஓரிடத்தில் நின்றபோது மயங்கிவிழுந்துவிட்டான்.

இந்தச்சந்தர்ப்பத்தில் தசைகளின் தொழிற்பாடு குறைவாக இருக்கும். குருதிச்சுற்றோட்டத்தின் அளவு குறையும். மூளைக்கு செல்லும் குருதியின் அளவு குறைய சக்தி வெளியேற்றம் குறையும். எனவே உணர்விழக்க நேரிடும்.மயங்கிவிழும் சந்தர்ப்பம் உருவாகும்.

**மனித உடல் பற்றிய தகவல்கள்**

| | | |
|---|---|---|
| மிகப்பெரிய உறுப்பு | - | ஈரல் |
| மிகப்பெரிய அங்கம் | - | தோல் |
| மிகச்சிறிய சுரப்பி | - | தைரொயிட் |
| உயிரற்ற கலங்களால் ஆக்கப்பட்டுள்ள பகுதி | - | நகம், மயிர் |
| மிகப்பெரிய தசை | - | இதயத்தசை |
| உடலில் வியர்க்காத பகுதி | - | உதடு |

**விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள்**

| | | |
|---|---|---|
| வெப்பமானி | - | கலிலியோ கலிலி |
| கடிகாரம் | - | கிறிஸ்டிபன் ஹேஜென்ஸ் |
| சைக்கிள் | - | கிரிட் பாட்ரிக் மக்மிலன் |
| மின்னழுத்தி | - | சீலி |
| மைக்கிரோஸ்கோப் | - | ஜே.ஜொன்சன் |

**விஞ்ஞான விதிகளும் கண்டுபிடித்தவர்களும்**

| | | |
|---|---|---|
| மிதத்தல் விதிகள் | - | ஆர்க்கிமிடிஸ் |
| மின்காந்ததூண்டல் | - | மைக்கல் பரடே |
| புவிஈர்ப்பு இயக்கவிதிகள் | - | ஐசக் நியூட்டன் |
| ஒளிமின் விளைவு, சார்பியல் தத்துவம் | - | ஜன்ஸ்டீன் |

# மூளைக்கு விவேகம் தரும் இலகு வழி

ஆசிரியர்
சிவகுமாரன்

1.ஒரு விலங்குப்பண்ணையில் கூடொன்றில் ஆடுகளும் மாடுகளும் கோழிகளும் உண்டு. மொத்தவிலங்குகளின் எண்ணிக்கை 79 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 242 ஆகும். கூட்டிலுள்ள கோழிகளின் எண்ணிக்கை யாது?

**1.** ஆடு+மாடு+கோழி = 79 ,

4ஆடு +4 மாடு+2கோழி =242

**2.** 2ஆடு +2மாடு+1கோழி = 121

**3.சமன்பாடு** 2-1இலிருந்து ஆடு+ மாடு = 42

**சமன்பாடு** 1-3இலிருந்து கோழி = 37

**விடை** = 37

2. ஒரு ஆற்றில் மேல்நோக்கி படகொன்றை செலுத்தும் போது ஒரு மனிதனின் வேகம் மணிக்கு 8 கிலோமீற்றர் ஆகும். ஆற்றில் கீழ்நோக்கி படகை செலுத்தும் போது அவனது வேகம் மணிக்கு 12 கிலோமீற்றர் ஆகும். ஆற்றில் நீரோட்டத்தின்வேகம் யாது?

**விடை** 8+12/2 = $10kmh^{-1}$

ஆற்றின் வேகம் $2kmh^{-1}$

3. ஒழுங்கான பல்கோணி ஒன்றின் அகக் கோணமென்றினதும் புறக்கோணமொன்றினதும் கோணங்களுக்கிடையிலான விகிதம் 11:1 ஆகும். இப்பல்கோணியில் உள்ள பக்கங்களின் எண்ணிக்கை யாது?

12X=180

X=15

**விடை** பக்கங்களின் எண்ணிக்கை =360/15=24

4. குறித்த ஒரு பாத்திரத்தில் உள்ள பழச்சாறு ஒரே அளவிலான 9 சிறிய குவளைகளிலும் ஒரே அளவிலான 4 பெரிய குவளைகளிலும் நிரப்புவதற்கு போதுமானதாகும். மேற்படி பானத்தை 6 சிறிய குவளைகளிலும் 6 பெரிய குவளைகளிலும் நிரப்பலாம். இப்பானத்தை பெரிய குவளைகளில் மாத்திரம் நிரப்பு வோமாயின் நிரப்பக் கூடிய குவளைகளின் எண்ணிக்கை யாது?

9X+4Y = 6X+6Y

3X = 2Y

6X+6Y = 2(3X)+6Y

= 4Y+6Y = 10Y

**விடை 10**

5. ஒரு முச்சக்கர வண்டியில் ஒரு தொகுதி பொருட்களை ஏற்றிய போது சாரதியுடன் அதன் நிறை 160கிலோகிராம் ஆகும். வண்டியினதும் பொருட்களினதும் நிறைகளின் கூட்டுத்தொகை சாரதியின் நிறையை விட 40கிலோகிராம் இனால் கூடியதாகும். சாரதியின் நிறை யாது,?

(X+40)+X = 160

X= 60

**விடை 60 Kg**

# முகப்பருவிலிருந்து விடுதலை

முகப்பருவிலிருந்து விடுதலை பெறுவது எப்படி என்பதை நீங்கள் நலமாகவினூடாக விளக்கியிருக்கிறார் குடும்ப வைத்திய நிபுணர் எம்.கே. முருகானந்தன்.

***எனது வயது 17. எனது முகத்தில் பருக்கள் அதிகமாக தோன்றுகின்றன. பலவிதமான கிறீம்களை உபயோகித்தும் பலன் இல்லை. சில பருக்கள் கூடு போல் வீங்கி சீழ் பிடிக்கின்றன. சில காய்ந்து கருகுகின்றன. எனது முகம் மேடு பள்ளமாக மாறி அவலட்சணமாக மாறி வருகிறது. பலரும் பலவிதமான ஆலோசனைகளை கூறுகிறார்கள். சிலர் சொக்கிலேட்***



***சாப்பிட வேண்டாம் என்கிறார்கள். வேறுசிலர் எண்ணெய் உணவுப் பொருட்களை உண்ணவேண்டாம் என்கிறார்கள். முகப்பரு தொல்லையிலிருந்து மீள்வது எப்படி?***

**பதில்:** உங்களது வயது 17 என்கிறீர்கள். வளரும் இளம் பருவத்தினருக்கு உரிய நோய்தான் முகப்பருக்கள். இதனை ஆங்கிலத்தில் acne vulgaris என்பார்கள். பருவம் அடையும் வயதில் ஆரம்பிக்கும் முகப்பருக்கள் பெரும்பாலானவர்களுக்கு 23,25 வயதில் மறைந்து விடுகிறது. ஆயினும் இந்நோயின் தாக்கம் மிக அதிகமாக பெண்களில் 16-17 வயதும் ஆண்களில் 17-19 வயதும் ஆகும். தோலுக்கு வழுவழுப்பையும் போசாக்கையும் அளிக்கும் நெய்ச்சுரப்பிகள் அடைபட்டு அலற்சி ஏற்படுவதனால்தான் முகப்பருக்கள் தோன்றுகின்றன. முகப்பருக்கள் வருவதற்கு மூன்று காரணங்களைக் கூறுகிறார்கள்.

முதலாவது காரணம், நெய்ச்சுரப்பியிலிருந்து சுரக்கும் பதார்த்தத்தின் அளவினைப் பொறுத்ததாகும். அதிலிருந்து சுரக்கும் திரவமாகிய sebum அதிகமாக சுரப்பவர்களுக்கு முகப்பருக்கள் அதிகமாக தோன்றுவதற்குரிய வாய்ப்பு அதிகம். இரண்டாவது காரணம் ஹோர்மோன் ஆகும். அன்ரோஜன்( Androgen) முகப்பருக்கள் தோன்றும் வேகத்தை தீர்மானிக்கின்றன. மூன்றாவது காரணம் பக்டீரியாக்களாகும். மனிதர்களது தோலில் பக்டீரியா கிருமியாகிய புரபுரயோனா பக்டீரியம் அக்னிஸ்( proprinobactrium acnes) சிலரது நெய்ச்சுரப்பிகளினுள் பரவி முகப்பருக்களை உண்டாக்குகிறது.

இக்காரணங்களைத்தவிர குடும்பத்தினரிடையே முகப்பருத்தொல்லை இருந்தால் அதுவும் முகப்பரு அதிகம் வருவதற்கு காரணமாயிருக்கலாம்.

**சிகிச்சை**

முகப்பருக்களை கிள்ளவோ நசுக்கவோ உடைக்கவோ வேண்டாம். ஏனெனில் இவற்றால் அவ்விடங்களில் வடுக்கள் தோன்றும். முகத்தை சவர்க்காரமும் நீரும் கொண்டு ஒழுங்காக கழுவ வேண்டும். பக்றீரியா கிருமிகளை தடுக்கக்கூடிய chlorhexidine, hibiscrub போன்றவற்றால் முகத்தை சுத்தம் செய்வது நல்லது.

benzoyl peroxide, tretinoin ஆகிய மருந்துகள் உபயோகிக்கப்படுகின்றன. இவற்றை எப்படிப் பூசுவது, எந்த நேரத்தில் பூசுவது போன்ற விடயங்களை நேரிடையாக உங்கள் வைத்தியரிடம் கலந்தாலோசிக்க வேண்டும். benzoyl peroxide என்ற மருந்தை 2.5% செறிவில் ஆரம்பிப்பது நல்லது. மருந்தை பூசமுன்னர் முகத்தை சோப்பினால் நன்கு கழுவவேண்டும். பின்னர் முகம் முழுவதும் பூசி மூன்று மணித்தியாலங்களின் பின்னர் கழுவி விடுங்கள். ஒரு வாரத்திற்கு இவ்வாறு செய்யும் போது எதுவித பிரச்சினையும் தோன்றாவிடின் இரவில் கழுவாமல் அப்படியே விடலாம். மருந்தின் செறிவை கூட்டலாம்.

முகப்பருக்கள் சீழ்பிடித்திருந்தால் நுண்ணுயிர் கொல்லி மருந்தாகிய Erythromycin or Metronidazole கலந்த களிம்பு மருந்துகள் உதவக்கூடும். அதற்கும் குறையாவிடின் நுண்ணுயிர் கொல்லி மாத்திரைகளான Erythromycin or Oxytetracycline இனை மூன்று மாதங்கள் வரை உட்கொள்ள வேண்டும்.

எமது கடந்த மாத இதழில் டெங்கிலிருந்து விடுதலை என்ற ஆக்கத்தை வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் அவர்கள் தந்துதவியிருந்தார். இனிவரும் காலங்களில் அவரால் எழுதப்பட்ட சமகாலசுகாதாரப் பிரச்சினைகள் என்ற கையேட்டிலிருந்து வருமுன் காப்போம் பகுதியினூடாக அவர் எமக்கு விட்டுச்சென்றுள்ள விழிப்புணர்வு விடயங்களை அறிந்து கொள்வோம்.

# நெருப்புக்காய்ச்சல்- TYPHOID

**நோய்க்காரணி-** Salmonella typhi

## ஏற்படும் முறை

குடல் மூலமாக கிருமி உடலினுள் சென்று நிணநீரின் மூலம் இரத்தத்துடன் சேருகிறது. இது அசுத்த நீர் உணவு, கைகள் மூலமாக உடலுக்குள் செல்கிறது.

## நோயின் அறிகுறிகள்.

1.ஒரு கிழமைக்கு மேல் தொடர் காய்ச்சல், தலையிடி, உடல்மெலிவு, நித்திரையின்மை, ஓங்காளம், மூக்கில் இரத்தக்கசிவு,

2.வயிற்றுநோ, வயிற்றோட்டம், அல்லது மலச்சிக்கல்,வயிறு கலக்கநிலை

3. கடும் பலவீனம்

4. கல்லீரல் வீக்கம்,

தகுந்த வைத்தியரிடம் காட்டி சிகிச்சை பெறுதல் வேண்டும். இரத்தப்பரிசோதனை மூலம் நோயை உறுதி செய்யலாம்.

## சிகிச்சையும் பராமரிப்பும்

1.நோயாளியை தனிமைப்படுத்தல்

2.சிகிச்சை முறையைப் பயன் படுத்துதல்

3.மருந்துகளை உரிய முறையில் கொடுத்தல்

**நோய் ஏனையோருக்கு பரவாது தடுத்தல்**

1.உரிய முறையில் நோயாளியின் மலத்தை அகற்றுதல்

2.கைகளை கழுவியபின் உணவு எடுத்தல்

3.சுத்தமான நீரை உட்கொள்ளுதல்

4. தடுப்பு மருந்து தேவைப்படுபவர்களுக்கு கொடுத்தல்



## துயர் பகிர்கின்றோம்



முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரியும் முன்னாள் யாழ் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளருமாகிய வைத்திய கலாநிதி

திரு இ.தெய்வேந்திரன் அவர்கள் இறைவனடி சேர்ந்துள்ளார். எம் மக்களுக்காக அவர் ஆற்றிய பணி உன்னதமானது. இடம்பெயர்ந்த மக்களுக்கான நிபுணத்துவ ஆலோசகராகவும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் முன்னாள் தலைவருமாக பல பொறுப்புக்களை வகித்து மக்களுக்காக சேவையாற்றியிருந்தார். மக்களுக்கு மனிதாபிமான பணியாற்றிய உத்தமரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்திற்கு எமது சஞ்சிகையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

# தைரியத்தை ஊட்டுவோம் தன்மதிப்பைக் கூட்டுவோம்

முருகனுக்கு வயது 16. கா.பொ.த சாதாரணதரப்பரீட்சை யில் கணக்கு பாடத்தில் சித்தி பெறத்தவறிவிட்டான். அந்த வாரம் முழுவதும் அதனைப் பற்றியே சிந்தித்துக்கொண்டி ருந்தான். "கொஞ்சம் நல்லா படித்திருக்க வேண்டும் என்று தன்னையே நொந்து கொண் டான். பதினான்கு வயதான அவன் தங்கை கண்ணகி கணக்கில் முதல் பெறுபேறு வாங்கியிருந்தாள். அவள் பெற்றோர் அவளைப்பாராட்டி பெருமை கொண்டனர். அதனைக்கண்டு முருகன் மனச்சோர்வு அடைந்தான். தன்னை உற்சாகப்படுத்த பத்து வயதுத் தம்பியோடு விளையாடி னான். தம்பி அவனது முகப் பருவை சுட்டிக்காட்டி கேலி செய்தான். முருகனுக்கு கோபம் ஏறியது. ஆத்திரத்தில் தம்பியைக் கிள்ளி வைத்தான். தம்பி அழுது கொண்டு பெற்றோரிடம் ஓடினான். மிகப்பலமாக கிள்ளி வைத்ததாக சொன்னான். பெற்றோர் முருகனைக் கண்டித் துப் பேசினர். கணக்குப்பாடத்தில் தோல்வி, தங்கையின் வெற்றி, பெற்றோரின் கண்டிப்பு, அனைத் தும் முருகனுக்கு மனக்குழப் பத்தைக் கொடுத்தன. தன்னம் பிக்கை குறைந்து தைரியம் இழந்து தன் மனதில் எழுந்த கொந்தளிப்பில் சிக்கித் தத்தளித்தான்.



இதயம் தனிமனிதனது மனவெழுச்சியின் மையமாக அமைவது போல் தைரியம் ஒரு நபரின் நற்பண்புக்கு அடித்தளமாக அமைகிறது. தைரியம் நெருங்கிய முறையில் பயத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. ஆபத்துக்குரிய நேரங்களில் தைரியத்தையும்

## பெற்றோர் விழிப்புணர்வு

பயத்தையும் அனுபவிக்கிறோம். நம் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் வெவ்வேறு சூழ்நிலைகளில் சரியாக சிந்தித்து செயல்பட தைரியம் மிகவும் சிறப்பாக தேவை.

இளைஞர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமானால் தாங்கள் எடுக்கும் முடிவுகளினால் ஏற்படும் ஆபத்தை சந்தித்தாக வேண் டும். வாய்மை, கடினஉழைப்பு, அன்பு இவை ஆபத்தை உள்ளடக்கியுள்ளன.

### தைரியத்திற்கோர் இலக்கணம்

ஒரு காரியத்தை அடைவதற்காக நமக்குள் ஏற்படும் நம்பிக்கையே தைரியம். உதாரணமாக கணக்கில் தோல்வியுற்ற முருகன் ஒவ்வொருநாளும் இரண்டு மணிநேரமாவது கணிதபாடத்தில் செலவிட்டு அடுத்தமுறை நல்ல புள்ளிகள் வாங்க முடிவெடுக்கும் போது அவன் தைரியத்தை வெளிப்படுத்துகிறான்.

முருகனுக்கு ஏற்படும் தைரியம் எங்கிருந்து வருகிறது. தன் மீதுள்ள நம்பிக்கையில் இருந்து தைரியம் ஏற்படுகிறது. குறிப்பாக என்னிடம் திறமையிருக்கிறது. என்னால் கணக்கு பாடத்தில் வெற்றிபெறமுடியும் என்ற தன்னம்பிக்கையில் இருந்து தைரியம் உருவாகிறது.

நற்குணமுள்ளவன், சிறப்புடை யவன், என்ற தன்னம்பிக்கை கொண்டு அத்தோடு அவனது தன்மதிப்பும் அவனுக்கு ஊக்கம் அளிக்க தொடர்ந்து கணக்கு பாடத்தை நன்றாக படித்து நல்ல மதிப்பெண்களை பெறத் தூண்டிவிடுகிறது. விளையாட்டுத் தனமாக இருப்பதற்கு பதிலாக படிப்பில் கவனமாக இருக்க

முருகனைத்தட்டிக் கொடுக்கிறது. உயர்வான தன்மதிப்பு தைரியத துக்கு இட்டுச்செல்கிறது. தாழ் வான தன்மதிப்பு தைரியத்தை கெடுக்கிறது. உதாரணமாக இளைஞர்களை தட்டிக்கொடுக்க வேண்டுமானால் முதலில் அவர்களின் சிந்தனைகள் உணர்வுகள் எவ்வாறு செயலைப்பாதிக்கின்றன. என்பதைப் புரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். இளம் பருவத்தினருக்கு நிகழ்ச்சி, சிந்தனை செயல், உணர்வு, சுழற்சி சிறந்ததாக செயல்பட வேண்டும்.

முருகனின் கணக்கு பரீட்சை பற்றிய சிந்தனை பற்றி பார்ப்போம்.

1.நான் பள்ளியில் நன்றாகப் படிப்பது முக்கியமானது.

2.பரீட்சையில் தோற்றுள்ளேன். நான் புத்திசாலி இல்லை என்பது எனக்கு தெரியும். என் குடும்பத்தில் என் தங்கைதான் புத்திசாலி. நான் பரிதாபத்திற்குரியவன்.

இத்தகைய இரண்டாவது சிந்தனை அவன் தன்மதிப்பை குறைத்துவிடுகிறது. எதிர்மறை உணர்ச்சிகள், தைரியமின்மை கோபம், மனச்சோர்வு, தான் ஒன்றுக்கும் உதவாதவன் என்ற வேண்டாத உணர்ச்சிகளை தூண்டிவிட்டன. இவ்வுணர்வுகள் மேலும் எதிர்மறைச்செயல் களுக்கு வழிகாட்டிவிடுகின்றன.

முருகனின் வாழ்க்கையில் ஒரே ஒரு நிகழ்ச்சிமட்டும் ஏற்பட வில்லை. இவ்வாறு பல நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. முதல் நிகழ்ச்சி கசப்பு அளிக்கும் போது அதைத் தொடரும் நிகழ்ச்சிகளும் கசப்பு அளிப்பதாக அமைந்துவிடும். தன் நண்பர்களின் ஏளனப்பேச்சு அவனுக்கு மனச்சுமையை அதிகரிக்கும். தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகள் மனக்கசப்பு தருவதாய் அமைந்துவிடுகின்றன. தோல்விகளை கசப்பான நிகழ்ச்சிகளை சமாளிக்க தைரியம் மிகவும் அவசியமானதாகும்.

இளைய தலைமுறையினர் தைரியம் குறையும் போது தமது வேதனையை குறுக்கு வழியில் குறைக்கப்பார்க்கிறார்கள். விளையாட்டு கலைகளில் ஆர்வம் இருப்பவன் தனது வேதனையை குறைத்துக் கொள்ள வழியுண்டு. மாறாக சில இளைஞர்கள் இவ்வாறான தற்காலிக கவலைகளை குறைத்துக்கொள்ள தீயவழிகளிலும் இறங்கிவிடுவதுண்டு. அவ்வாறு தீய வழிகளில் பிள்ளைகள் செல்லாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கிறது. எனவே ஆக்கம் தரும் செயல்களை செய்வதற்கு பிள்ளைகளை பெற்றோர் ஊக்குவிக்கவேண்டும். பெற்றோர்களே இளைய தலைமுறைக்கு தைரியம் ஊட்டுபவர்களாகவும் தைரியத்தை கொடுப்பவர்களாகவும் அமைந்து ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக்கொடுக்க வேண்டும். இன்றைய பெற்றோர்கள் வேலைப்பழுவின் மத்தியில் தமது பிள்ளைகளை கவனிக்கத்தவறுவதுடன் பிள்ளைகள் செய்யும் தவறுகளை கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகின்றனர். பிள்ளைகளை வழிநடத்தத் தெரியாமல் தடுமாறுகின்றனர். பெற்றோர் இணையத்தில் பிள்ளைகளை அளவுக்கதிகமான நேரத்தை செலவிட அனுமதிக்கின்றனர். அதுவே இன்றைய இளைய தலைமுறையை ஆபத்தான வழிக்கு கொண்டு செல்கிறது. அதனை உணர்ந்து எம் இளையதலைமுறையை அழிவிலிருந்து காப்போமாக.



## நட்பு

அன்பான நண்பனை நேசிப்போம்
அழகான நட்பை சுவாசிப்போம்.
அகந்தையை அகற்றுவதும் நட்பு
அழிவை தடுப்பதும் நட்பு

நட்பிற்கு வரைவிலக்கணம் ஏது
நல்ல நண்பருக்கு நிகர் உலகில் ஏது
நட்பினால் தீயவை களைவோம்.
நட்புடன் கைகோர்த்து மகிழ்வோம்.

சங்கீதா
வேம்படி மகளிர் கல்லூரி

## படைப்பு

இயற்கை தந்த இன்பத்தில்
இளமை துள்ள எழுந்திடுவோம்.
இறைவன் தந்த வாழ்வில்
ஈகை பல செய்திடுவோம்.
அருமை அன்னை அணைப்பில்
அழகிய உலகம் படைப்போம்.
அன்புத்தந்தை வழியில்
அகிலம் போற்ற வாழ்வோம்

க.செழியன்
இந்துக்கல்லூரி




## நாட்டுப்பற்றாளர்கள் எங்கே?

நடமாடும் குடிகளில்
நடைபோடும் மக்களில்
நலம் கேட்கும் மனிதர்கள்-இன்று
நம்மில் எத்தனைபேரோ?

அவசர ஊரில்
அந்நிய ஊரில்
அந்நியோன்னியம் இல்லாமல்
அணுவணுவாய் தவிக்கிறான் தமிழன்

புல்லரின் போர்ப்புயலால்- அன்று
புன்னகை சோர்ந்துவிட்டது.
அன்பு வாழ்க்கையை -இன்று
அனுபவமாய் பார்க்கிறான் தமிழன்

நாளையை நிர்ணயிக்கும்
நங்கையை காக்கும்
நற்சிந்தனையுடன் வாழ்ந்த
நாட்டுப்பற்றாளர்கள் எங்கே?

இ.பிரவிலாசா
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

# போதையை ஒழிப்போம்

எதிர்காலத்தில் நன்றாக வருவாய் என்றல்லவா நினைத்தேன்.... அந்த நினைப்பில் மண்ணையள்ளிப் போட்டு விட்டாயே "உன்னை இந்தக் கோலத்தில் பார்க்கத்தானா நாம் இவ்வளவு காலம் கஷ்டப்பட்டோமா? போதைப்பொருள் பாவிக்கும் பிள்ளைகளின் பெற்றோரின் குமுறல்தான் இது.

எனவே மாணவச்செல்வங்களே போதைக்கு அடிமையாகாமல் உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

பொதுவாக இலங்கையில் ஹெரோயின், கஞ்சா, அபின், மர்ஜுவானா ஆகிய நான்கு போதை தரும் பொருட்களே பாவனையிலுள்ளன.அதே போன்று தான் சிகரெட் மதுபானம் ஆகியனவும் இளைஞர்கள் மத்தியில் பிரபலமான போதைப் பொருட்களாகவுள்ளன.

பொதுவாக போதைப் பொருட்களை உபயோகிப்போர் அதன் மூலம் ஒரு வித இன்ப உணர்வு ஏற்படுவதாக தெரிவிக்கின்றனர். இவர்களுக்கு ஏற்படும் இந்த இன்பம் கிட்டத்தட்ட ஆறு மணி நேரங்களுக்கே நீடிக்கும் அதன் பிறகு அவர்களுக்கு மன அழுத்தம் எளிதில் கோபமடைதல் நினைவாற்றலில் குறைபாடு போன்ற குணங்களை கொண்டவர்களாக மாறுவர் என தெரிவிக்கப்படுகிறது. இவற்றைத் தவிர போதைப் பொருள் பாவனையால் பசியின்மை, உடல்நிறை குறைதல், நரம்பு மண்டல பாதிப்பு, கண் பார்வை குறைதல், நரம்பு உணர்ச்சி குறைதல், உதடு கறுத்தல், ஆண்மை குறைவு போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன. இளம் வயதில் பழகிக் கொள்ளும் இத்தகைய போதைப் பழக்கங்கள் மெல்ல மெல்ல இவர்களை அடிமையாக்கி விடுகிறது. போதைப் பழக்கத்தினால் முதலில் பாதிப்படைவது மனிதனின் நரம்பு மண்டலம். மூளைக்குச் செல்லும் நரம்புகளைப் பாதித்து நினைவாற்றலை குறைக்கச் செய்கின்றது. இதன் காரணமாக சீரான இதயத்துடிப்பு பாதிக்கப்பட்டு இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. உடலில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களினால் இதை உட்கொண்டவர்கள் மனதளவில் தன்னம்பிக்கை இழக்கிறார்கள். உடல் சோர்வடைதல், குற்ற உணர்ச்சி, தனிமையை நாடுவது போன்ற அவல நிலைக்கு உள்ளாகின்றார்கள். போதைப்




பொருட்களினால் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் பாதிப்புகள், சமுதாயம் மற்றும் குடும்பத்தில் ஏற்படும் பாதிப்புகள் என பலவகையான தீமைகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

இந்த போதைப் பொருள் பாவனை



சிறுவயதிலேயே ஏற்பட்டு விடுவதால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக அவர்கள் தனிமையை விரும்பினால் அடிக்கடி பணம் கேட்டால், படிப்பில் நாட்டம் குறைந்தால் உரையாடல்களில் மாற்றம் தெரிந்தால் வழக்கத்திற்கு மாறாக நடவடிக்கை தென்படுமாயின் அவர்களை சற்று கூர்ந்து அவதானிப்பது சிறந்தது. ஒருவர் போதைப் பொருளுக்கு அடிமையாகியிருந்தால் ஆரம்பத்திலே இனங்காண்பதன் மூலம் முளையிலேயே கிள்ளி எறிந்து விடாலாம்.

முக்கியமாக இன்றைய இளம் சமுதாயத்தினர் இணையதளத்தை தங்கள் உலகமாகக் கருதி வாழ்வதால் அடிக்கடி அவர்கள் பார்க்கும் இணைய தளங்கள் குறித்து பெற்றோர் விழிப்புடன் இருக்கவேண்டும். இவற்றைத்தவிர சிறுவயதிலிருந்தே இசையில் அதிக நாட்டத்தை ஏற்படுத்தல், பத்திரிகை வாசித்தல் விளையாடுதல், இறைவழிபாடு செய்தல் போன்ற பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுத்தல் சிறந்தது. இதன் மூலம் எங்கள் குழந்தைகளை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம்.

யாராயினும் போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்டார்கள் எனின் மருத்துவர்களினதும் உளவளத் துணையாளர்களின் தும் ஆலோசனைப்படி செயலாற்றுவது நல்ல பலனைக் கொடுக்கும்.

போதைப் பொருட்களினால் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என எல்லா வகைகளிலும் பாதிப்புகளே ஏற்படுகின்றன. பள்ளிப் பருவத்திலோ அல்லது கல்லூரிகளிலோ படிக்கும் போது தீய நண்பர்களோடு ஏற்பட்ட பழக்கங்களினாலும் மற்றும் பொழுதுபோக்காகவும் பழகிக் கொண்ட பழக்கத்தை இன்று வரை விட்டு மீளமுடியவில்லை என வருத்தப்பட்டுக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். பலமுறை இத் தீய பழக்கங்களை விட்டொழிக்க வேண்டும் என முயற்சி எடுத்து தோற்றுப் போனவர்களும் இருக்கிறார்கள்.இத்தகைய போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களின் குடும்ப வாழ்க்கை, சமுதாய அந்தஸ்து, அலுவலக வேலை, நட்பு, உறவினர்கள் மற்றும் தொடர்புகள் என எல்லாவற்றிலும் விரிசல் ஏற்பட்டுவிடுகிறது. போதைக்கு அடிமையாகி இளமையிலேயே இறந்துவிடும் குடும்பத் தலைவனால் அக்குடும்பமே சிதைந்து சீரழிந்து விடுகின்றது. குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாகிவிடுகின்றது.

சிறிது சிறிதாக போதைப்பழக்கமானது அதிகரித்து அந்த அற்ப இன்பத்தைப் பெற்றுக்கொள்ள திருடுதல், பொய் பேசுதல் போன்றவற்றைச் செய்யத் துணிந்துவிடும் நிலை ஏற்பட்டுவிடுகின்றது.

போதையின் கோரப்பிடியில் அகப்பட்டவர்கள் அஞ்சாமல் பாலியல் குற்றங்களிலும் ஈடுபட்டு அதன் மூலம் பல நோய்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். எனவே போதையை ஒழித்து நல்வாழ்வைப் பெற்றிடுவோம்



# தேவையற்ற செலவுகளை தவிர்த்து சமூகத்திற்கு உதவுங்கள் - திரு. நாகரத்தினம்

ஏழை மாணவர்களின் கல்விக்கு பண உதவியளித்து கல்விக் காருண்யனாக விளங்கும் பேரம்பலம் நாகரத்தினம் அவர்களினது உள்ளத்து உணர்வுகளை எமது வாசக நெஞ்சங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். தொழில் வளர்ச்சி மூலம் எமது சமூகத்திற்கு முன்மாதிரியாக திகழும் அவர் ஈகைத் தன்மை மூலம் பலரை வாழவைத்த பெருமைக்குரியவராவார். நாகரத்தினம் அவர்களைப் போன்ற உயர்ந்த உள்ளங்களை நேர்காணல் செய்வதில் பெருமையும் மகிழ்வும் கொள்கிறோம்.

**1.உங்களது ஆரம்ப கால வாழ்க்கை பற்றி எமது வாசக நெஞ்சங்களுக்கு கூறுங்கள்?**

நான் 1968ஆம் ஆண்டு பிறந்தேன். எனது 16ஆவது வயதிலேயே நான் எனது தந்தையாருடன் சேர்ந்து தொழிலில் ஈடுபட ஆரம்பித்துவிட்டேன். ஆரம்பத்தில் ஒரு பலசரக்கு கடையாக இருந்த கடை பின்னர் சைக்கிள் கடையாகவும் கஜமுகன் என்ற பெயருடன் மிகப்பெரிய வர்த்தக நிலையமாகவும் மாற்றம் பெற்றது. சிறந்த மனைவியும் பிள்ளைகளும் கடவுள் எனக்கு தந்த வரம். 5 ஆண்பிள்ளைகள் உள்ளனர். அனைவரையும் சிறந்த நிலைக்கு கொண்டுவந்துவிட்டேன். தற்போது என்னால் இயன்றவரை சமூகத்திற்கு சேவையாற்றிக் கொண்டிருக்கிறேன்.



**2.பலசரக்கு கடை எவ்வாறு மிகப்பெரிய வர்த்தக நிலையமாக மாற்றம் பெற்றது என்று எமது இளைய தலைமுறைக்கு சொல்லுங்கள்?**

பலசரக்கு கடையை சைக்கிள் கடையாக மாற்றினேன். மக்களின் தேவையறிந்து அதற்கேற்றவகையில் வியாபாரத்தை செய்யும் போது வெற்றி உண்டாகும். அந்தக்காலங்களில் மக்களுக்கு சைக்கிள் இன்றிய மையாத ஒன்றாக இருந்தது. எனவே எனது வியாபாரம் வளர்ச்சியடைந்தது.

**3. உங்களது சமூகப்பணிகள் எவை? எப்போதிருந்து அதனை ஆரம்பித்தீர்கள்?**

1980ஆம் ஆண்டு நல்லியக்கசபையினூடாக எனது சமூகப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை தொடர்கிறது. மருத்துவக்கல்லூரி மாணவர்கள் 15 பேரின் கல்விக்கு உதவி வருகிறேன். மேலும் சில பாடசாலைகளில் அதிபர்களால் சிபாரிசு செய்யப்பட்ட மாணவர்களுக்கு உதவியளித்து வருகிறேன். மேலும் விளையாட்டு அமைப்புக்கள் போன்றவற்றுக்கும் உதவினேன். நல்லூர் லயன்ஸ் கழகத்தினூடாக பல உதவிகளை செய்தேன். மேலும் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு 15பரப்பு காணியை வாங்கிக் கொடுத்தேன். விழிப்புலனற்றோர் சங்கம், சிறுவர் முதியோர் இல்லங்கள் போன்றவற்றுக்கும் உதவியுள்ளேன். போரில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் உதவி செய்துள்ளேன்.

**- அறிவமுது**

**4. நீங்கள் உதவி செய்யும் மாணவர்களிடமிருந்து நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?**

அவர்கள் சிறந்த நிலைக்கு வந்து அவர்களும் ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவவேண்டும். மேலும் பல சமூக சேவைகளைச் செய்யவேண்டும்.

**5. பண வசதியுடன் வாழ்பவர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

வீண் செலவுகள், அதாவது தேவையற்ற செலவுகளை தவிர்த்து சமூகத்திற்கு உதவுங்கள். நற்பணிகளுக்கு எமது பணத்தை பயன்படுத்தாவிடின் ஏதோ ஒரு வகையில் எமது பணம் நாளடைவில் அழிந்துவிடும்.

எமது நாட்டில் வாழ்ந்து தனது சுயமுயற்சியினால் முன்னேறி மற்றவர்களுக்கு உதவிவரும் கொடை வள்ளல் பேரம்பலம் நாகரத்தினம் அவர்களை பாராட்டி விடை பெறுகிறோம்.

# சாதனைகளின் சிகரத்தில் வேம்படி மகளிர் கல்லூரி

இலங்கையில் உள்ள முதல்தர தேசிய பாடசாலை களில் ஒன்றான யாழ் வேம்படி மகளிர் கல்லூரி தொடர்ந்து சாதனைகளைப் படைத்து வரு கிறது. பிரித்தானியர் காலத் தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பெண்கள் பாடசாலையானது அதிபர்களினதும் ஆசிரியர் களினதும் அயராத உயர் சேவைகளினாலும் மாணவர் களது விடாமுயற்சி, திறமை போன்ற வற்றாலும் பல்லாயிரக்கணக்கான புத்திஜீவிகளையும் சாதனைப்பெண்களையும் சமூகத்திற்கு கொடுத்துள்ளது. யாழ்மாவட்டத்திலே முன்னணி பாடசாலையாக விளங்கும் இக்கல்லூரியின் பெருமைகளையும் புகழையும் எடுத்தியம்ப முடியாத அளவுக்கு கல்லூரி நீண்ட வரலாற்றுப் பெருமையைக் கொண்டது. கடந்த வருடமும் சர்வதேச தேசிய மாகாண மட்ட சாதனைகளைப் படைத்து வரலாற்றுப்பெருமையை நிலைநாட்டியுள்ளது.



V.சண்முகரத்தினம்

கடந்த வருடம் நடைபெற்ற கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் 21 மாணவர்கள் 3A பெறுபேறினையும் 25 மாணவர்கள் 2A பெறுபேறினையும் பெற்றிருந்தனர். விஞ்ஞான பிரிவில் மாவட்ட மட்டத்தில் சலோம் துஷ்யந்தி குருபதம் 4ஆவது இடத்திலும் வர்த்தகப் பிரிவில் ம.குகாயினி 3ஆவது நிலையிலும் தொழில் நுட்பப்பிரிவில் சுதனா ராஜேந்திரன் 3ஆவது நிலையிலும் வந்து பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுத்தனர். கா.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 26 மாணவர்கள் 9A பெறுபேறினைப் பெற்றுள்ளனர். கல்வியில் மட்டுமின்றி இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் முதல் நிலையில் இப் பாடசாலை திகழ்கிறது. தொடர்ந்து மூன்று வருடங்களாக பளுதூக்கலில் டினேஜா ஜெயராட் ஜொய்சி பயஸ் தேசியமட்டத்தில் தங்கம் வென்றிருந்தார். அண்மையில் சர்வதேச ரீதியல் இந்தியாவின் புனேயில் நடைபெற்ற பளுதூக்கல் போட்டியில் வெண்கலப்பதக் கத்தை பெற்று சாதனைபடைத்தார். கடந்த வருடம் யாழினி ராஜேந்திரன் தேசிய மட்டத்தில் சிறந்த பெண் சாரணிய விருதைப்பெற்றிருந்தார். தமிழ்த்தின விவாதப்போட்டியில் தேசியமட்டத்தில் முதலிடத்தைப்பெற்று மாணவர்கள் வெற்றியை தமதாக்கினர். இளம் கணினி விஞ்ஞானிக்கான போட்டியில் சுகன்யா மனோகரன் வடமாகாணத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 6ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டார். ஆண்டறிக்கையையும் கணக்கையும் சிறப்பாக பேணியதன் ஊடாக வட மாகாணத்தின் சிறந்த பாடசாலைக்கான விருதையும் கடந்தவருடம் வேம்படி மகளிர் கல்லூரி பெற்றுக்கொண்டது. ஒவ்வொருவருடமும் பாடசாலைகளில் சகல துறைசார்ந்த தினங்களும் கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் மாணவிகள் தமது முயற்சியால் அரும்பு என்ற சஞ்சிகையை வெளியிட்டுவருகின்றனர். மாணவிகளிடையே பல்துறைசெயற்பாடுகளையும் கட்டியெழுப்பி அவர்கள் சகல துறைகளிலும் சிறந்து விளங்க பாடசாலை சமூகம் தொடர் ஒத்துழைப்பை வழங்கி வருகிறது. மாணவிகளை பல்துறை ஆளுமை மிக்கவர்களாக வளர்த்து சமூகத்தின் முன்னோடிகளாக வாழ வழிகாட்டும் பாடசாலை சமூகத்தையும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் எமது சஞ்சிகையின் சார்பில் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களது சாதனைகள் மென்மேலும் வளர வாழ்த்துகிறோம். அனைத்துப் பாடசாலைகளுக்கும் முன்மாதிரியாக திகழும் வேம்படி மகளிர் கல்லூரியின் புகழ் ஓங்குக.


ஜெ.டினேஜா


இ.யாழினி


வெற்றிக்கு வழிகாட்டும் பாடசாலைச் சமூகம்

# அறப்பணிகளால் உயர்ந்து நிற்கும் சைவ மகாசபை

**சைவமும் தமிழும் தழைத்தோங்க நம்முன்னோர்கள் அரும்பாடுபட்டார்கள். அந்த வகையில் அகில இலங்கை சைவமகாசபையானது சைவசமயத்தை வளர்த்து அறப்பணிகள் செய்து வருகிறது. மானிடம் அறக்கட்டளையானது சுய தொழிலை ஏற்படுத்திக்கொடுத்து வாழ்வாதார உதவி களைச் செய்துவருகின்றது. சைவமகா சபையினர் செயற்பாடுகளை கண்ணுற்று அந்நிறுவனத்தை எமது சஞ்சிகை நேர்காணல் செய்தது.**

**1.இந்த சமூக சேவைமையத்தை பற்றிய அறிமுகம் ஒன்றை செய்யுங்கள்.?**

சிறு அமைப்பாக தோற்றம் பெற்ற சைவமகாசபை இன்று பல உறுப்பினர்களை கொண்டு தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது. சைவமகா சபையின் தலைவராக திரு சி.சோதிமூர்த்தி அவர்களும் மானிடம் அறக்கட்டளையின் தலைவராக திரு இ.செல்வநாயகம் அவர்களும் பொதுச்செயலாளராக வைத்தியர் ப.நந்தகுமார் அவர்களும் கடமையாற்றுகின்றனர். அவர்களுடன் 40 உறுப்பினர்கள் சேவையாற்றுகின்றனர். வைத்தியர்கள் உட்பட உதவும் உள்ளம் கொண்ட பலரின் ஒத்துழைப்பினால் சைவமகாசபை வளர்ச்சிபெற்று செல்கிறது.

**2.சைவமகாசபையின் செயற்பாடுகள் பற்றி கூறுங்கள்?**

ஆன்மீக செயற்பாடுகளை செய்தல், அறநெறி பாடசாலையை வலுவூட்டுதல், சிவதொண்டர்கள், சிவமங்கையர்களை உருவாக்குதல், சிறார்கள், முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் போன்றவர்களுக்கான மருத்துவ உதவிகளை செய்தல், போன்ற செயற்பாடுகளை செய்துவருகிறது.

**3.மானிடம் அறக்கட்டளையினூடாக எவ்வாறான செயற்பாடுகளை செய்கிறீர்கள்?**

வாழ்வாதார உதவிகள், கிராமிய விழிப்புணர்வு, பெண்தலைமைத்துவ சுய தொழில் பங்களிப்பு, மாணவர்களிற்கு கல்வித்திட்ட உதவிகள் போன்றவற்றை செய்கிறோம். மலையகத்தை சேர்ந்த கணித விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் 15மாணவர்களினை பொறுப்பெடுத்து அவர்கள் கல்வி கற்க உதவுகிறோம்.

மானிடம் அறக்கட்டளையானது தெல்லிப்பளையில் சேதனவிவசாயப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்துள்ளது.




- அறிவமுது

தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அண்மையாக இன்றைய தேவைகருதி எந்தவிதமான இரசாயன பாவனைகளும் அற்ற நிலையில் சேதன முறையில் முழுமையாகவே மானிட விவசாய இயற்கை



பண்ணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது மரக்கறி வகைகளான தக்காளி, கத்தரிக்காய், வெண்டிக்காய், மிளகாய் போன்றவற்றின் உற்பத்திகள் சிறப்பாக இடம்பெறகின்றது. ஏதிர்காலத்தில் எல்லோரும் பெறக் கூடிய வகையில் சந்தைப்படுத்தலை ஏற்படுத்து வதற்கான உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபடவுள் ளோம்.

4. மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ உங்கள் எதிர்காலச் செயற்றிட்டம் என்ன?

ஒரு காலத்தில் இலங்கைத் தீவில் மிக அதிக சதவீதத்தில் கணித,விஞ்ஞான கற்கை நெறிகளுக்கு பல்கலைக்கழகத்திற்கு தமிழ் மாண வர்கள் தொடர்ச்சியாக தெரிவு செய்து கொண்டி ருந்தமையும் அதனை தொடர்ந்து அவர்களின் பல் கலைக்கழகத் தெரிவை குறைக்கும் நிலையில் தரப் படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டமையும் கடந்த கால வரலாறு.

ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறி தமிழ் மாணவர்களில் ஓர் சொற்ப சதவீதத்தினரை தவிர மிக பெருமளவான மாணவர்கள் O/L பரீட்சை யில் கணித,விஞ்ஞான பாடங்களில் சித்தி பெறக் கூட தவறிவிடுகின்றனர். A/L பாடத்தெரிவில் கணித, விஞ்ஞான கற்கை நெறிகளை தெரிவு செய்வோர் குறைந்து செல்வதும் இதன் விளைவாக கணித, விஞ்ஞானப் பிரிவு சித்திகளின் அடிப்படையிலான மருத்துவ,பொறியியல் துறை சார் வேலை வாய்ப்புகளை தமிழ் மாணவர்கள் பெற முடியாமல் இருப்பதும் வேதனை தரும் தொடர் கதையாக இருந்து வருகின்றது.

அதிலும் குறிப்பாக வன்னி பிராந்தியத்தில் உள்ள முல்லைத் தீவு, கிளிநொச்சி, மன்னார், கிழக் குப் பிராந்தியத்தில் உள்ள அம் பாறை, மட்டக்களப்பு, மலையகத் தில் உள்ள பதுளை, நுவரெலியா, கண்டி போன்ற மாவட்டங்களில் உள்ள கிராமப்புற பாடசாலைகளில் உயர்தர கற்கை நெறியான கணி தம், விஞ்ஞானம் ஆகிய இருதுறை களையும் மாணவர்கள் தொடர்வதற் கான சூழல் மிகவும் மந்த கதியி லேயே உள்ளது. நடைப்பெற்று முடிந்த க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் கூட ஒரு சில மாணவர் களின் கணித,விஞ்ஞான தேர்ச்சி வீதம் மிகவும் குறைந்த மட்டத்தில் பின்தங்கி காணப்படுகின்றது.



இதன் விளைவாக மாணவர்கள் அனைவரும் வர்த்தகம்,அழகியல் ஆகிய இரு கற்கை நெறிகளை மாத்திரம் தொடர்வதால் இப்பிரதேசங்களில் உள்ள தாதிமார்கள், வைத்தியர்கள், கணிதவியலாளர்கள், கணித,விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள், பொறியி யல் பிரிவில் உதவியாளர்கள் என பல்வேறுபட்ட தொழில் வாய்ப்புகளுக்கான அரச சேவைக்குள் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த அந்தந்த கிராம மக்கள் சார்பில் எவரும் அவ் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

இந்த நிலை தொடருமானால் பல கிராமப்புற பிரதேசங்களில் கல்வி, சமூக, பொருளாதார, அபி விருத்தியில் பாரிய பின்னடைவை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

எனவே கிராமப்புறங்களில் உள்ள மாணவர் களின் கணித, விஞ்ஞான பெறுபேறுகளை உயர்த்து வதை நோக்கமாக கொண்டு மானிடம் அறக்கட்ட ளையினால் கிராமிய தமிழ் மாணவர்களின் கணித, விஞ்ஞான மேம்பாட்டுச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதில் O/L மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான பாடங்களுக்கு விசேட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது. கிராமிய மட்டங்களில் சிறப்பு வகுப்புக்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் நடைபெற உள்ளது.

**அறப்பணிகளைச்செய்துவரும் சைவமகாசபை யின் செயற்பாடுகள் தொடர்ந்து சிறக்க எமது சஞ்சிகையின் சார்பில் வாழ்த்திநிற்கின்றோம்.**

# தரம் 5 மாணவர்களுக்கான வழிகாட்டல்

## தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்




### மரபுச்சொற்கள்

**கூட்டத்தை குறிக்கும் சொற்கள்**

அறிஞர் அவை
ஆ நிரை
ஆட்டு மந்தை
உடுத்திரள்
நடிகர்குழு
மயிற்குழாம்
சனத்திரள்
தோழியர் ஆயம்
மாந்தோப்பு
கள்வர் கூட்டம்
மலைத்தொடர்
வைக்கோற் கற்றை
முத்துக்குவியல்
குண்டர் கும்பல்

**குரல்வகை குறிக்கும் சொற்கள்**

அணில்,எலி,குருவி - கீச்சிடும்
ஆடு,கரடி,தவளை - கத்தும்
ஆந்தை - அலறும்
எருது - முக்காரமிடும்
பசு - கதறும்
சிங்கம் - கர்ச்சிக்கும்
புலி,பன்றி - உறுமும்
பாம்பு,பூனை - சீறும்
மயில் - அகவும்
யானை - பிளிறும்
நரி - ஊளையிடும்
குயில்,சேவல் - கூவும்
குதிரை - கனைக்கும்
நாய் - குரைக்கும்

**இலைமரபுப்பெயர்**

மா,பலா,வாழை - இலை
தென்னை,கமுகு,
பனை,தாழை - ஓலை
நெல், புல் - தாள்

**பிஞ்சு மரபுப்பெயர்**

வாழையின்
இளம் பிஞ்சு - கச்சல்
தென்னையின்
இளங்காய் - குரும்பை
பனையின்
இளங்காய் - நுங்கு
மாவின் இளம்பிஞ்சு - வடு
பலாவின் பிஞ்சு - மூசு

**குலை மரபுப்பெயர்**

வாழை,முந்திரி,ஈஞ்சு - குலை
மா,புளி - கொத்து
நெல்,சோளம் - கதிர்

**பிறமரபுப்பெயர்**

ஆட்டுமலம் - பிழுக்கை
கழுதை மலம் - விட்டை
பறவை மலம் - எச்சம்
மாடு,எருமை மலம்- சாணம்
யானை,குதிரை,ஒட்டகம்
போன்றவற்றின் மலம் - இலத்தி
ஆடு மேய்ப்பவன் - இடையன்
பசு மேய்ப்பவன் - ஆயன்
கப்பல் செலுத்துபவன் - மீகாமன்
வானவூர்தி
செலுத்துபவன் - வலவன்

**வித்து மரபுப்பெயர்**

மா,பலா,புளி - கொட்டை
நெல்,சோளம் - மணி
கத்தரி,மிளகாய் - விதை
ஆமணக்கு - முத்து

**உள்ளீட்டுமரபுப்பெயர்**

மா,வாழை - சதை
பலா,தோடை - சுளை
நெல்,கமுகு,
தினை,வரகு - அரிசி
அவரை,துவரை,பயறு- பருப்பு

**இளமைப்பெயர்கள்**

அணில் - குஞ்சு,பிள்ளை
ஆ,எருமை - கன்று
ஆடு,கரடி,
குதிரை,பூனை,பாம்பு - குட்டி
காகம்,குருவி,கோழி,மீன் - குஞ்சு
கிளி - பிள்ளை,குஞ்சு
குரங்கு - குட்டி,பறழ்
தென்னை - கன்று,பிள்ளை
தவளை - குஞ்சு, பேத்தை
சிங்கம்,புலி - குட்டி,குருளை
யானை - போதகம்,கன்று,குட்டி
நெல் - நாற்று
மான் - கன்று,குட்டி
பனை - வடலி
வாழை - கன்று,குட்டி
கமுகு - பிள்ளை,கன்று

**இன்றைய சமூகத்தில் எமது இளைய தலைமுறை மனம்விட்டு இன்னொருவருடன் உரையாட முடியாமல் தமது பிரச்சினைகளை மனதிற்குள் புதைத்து வைப்பதன் மூலம் மனஅழுத்தத்தை அதிகரித்து தமது கல்வியிலும் ஏனைய செயற்பாடுகளிலும் பின்னடைவை சந்திப்பதும் அறியாமையினால் தற்கொலை போன்ற தீய முடிவுகளை எடுப்பதுமாக தமது வாழ்வையே தொலைத்து வருகின்றனர்.. எனவே மனம் திறந்து பேசுங்கள் பகுதியினூடாக எம்முடன் உரையாடி மனஅழுத்ததிலிருந்து விடுபடுங்கள்.**

# மனம் திறந்து பேசுவோம்

**1. நான் தரம் 8 இல் படிக்கிறேன். பாடசாலையில் கல்வியில் சிறந்து விளங்குகிறேன். அண்மையில் ஆசிரியர் ஒருவர் என்னை அழைத்து பாடசாலையில் சிறுவேலை ஒன்றைச் செய்யச்சொன்னார். நான் அதனை செய்யாமல் இருந்துவிட்டேன். ஆனால் மறுநாள் ஆசிரியர் என்னை அழைத்து எனது காதைப்பொத்தி அடித்தார். காதால் இரத்தம் வந்தது. அப்பா ஆசிரியரை அடுத்தநாள் பேசிவிட்டார். அதிலிருந்து ஆசிரியர் அடிக்கடி என்னை பேசுவார். பரீட்சையில் அவரின் பாடத்தில் குறைவாக புள்ளிகள் பெற்றுவிட்டேன். பாடசாலைக்கு செல்லவே விருப்பமற்ற நிலையில் இருக்கிறேன். நான் என்ன செய்யமுடியும்?**

முதலில் உங்கள் தவறை நீங்கள் உணர்ந்து கொண்டுள்ளீர்கள். அது சிறந்த விடயம். ஆசிரியர் ஒரு வேலையை செய்யச்சொன்னால் அதை அலட்சியப்படுத்தாமல் செய்து முடித்துவிடுங்கள். தண்டனை கிடைக்காது. நீங்கள் மாணவன் என்ற வகையில் ஆசிரியரிடம் பணிந்து செல்லுங்கள். அவரிடம் நீங்களாக சென்று அன்பாக உரையாடுங்கள். அவர் வெறுத்தாலும் நீங்கள் மலர்ந்த முகத்துடன் இருங்கள். அந்த தண்டனையை மறந்து கல்வியை கற்று சிறந்தவானாக வரவேண்டும் என நினையுங்கள். வாழ்க்கையில் நிறைய சவால்களை சந்தித்து சிறந்த நிலைக்கு வரப்போகும் உங்களுக்கு இது சிறிய தண்டனைதான் என நினைத்து அந்தப்பாடத்தை விரும்பிப்படியுங்கள். ஆசிரியரும் அவற்றை மறந்து மன்னிப்பார்.

ஆசிரியர்களே மாணவர்களின் உள்ளங்கள் மென்மையானது. அவர்கள் தமது தவறை உணர்ந்து உங்களிடம் மன்னிப்பு கேட்டால் அவர்களிற்கு அளவுக்கதிகமான தண்டனை கொடுக்காதீர்கள். தவறு நடைபெற்றதற்காக தொடர்ந்து அதனை வைத்து மாணவர்களை மனதால் காயப்படுத்துவதை தவிர்த்து விடுங்கள். தேவையானபோது கண்டிப்புடனும் ஏனைய நேரங்களில் நட்புடனும் நடந்து கொள்ளுங்கள்.

**2. நான் கா.பொ.த சாதாரணதரத்தில் கணித பாடத்தில் சித்தியடையத் தவறிவிட்டேன். அனைவரும் என்னை பரிகாசமாக பார்க்கிறார்கள். எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. எதிலும் பிடிப்பற்றுள்ளேன். உயர்தரம் படிக்கவே விருப்பமில்லை. என்ன செய்வது?**

தோல்வி தான் வெற்றியின் முதல்படி. இனிமேல்தான் உங்கள் எதிர்காலம் நல்லதாக அமையவேண்டும். முயன்றால் முடியாதது எதுவுமில்லை. அடுத்தமுறை சித்தியடைவேன் என நினைத்து கணிதத்தை படிப்பதுடன் உயர்தரக்கல்வியையும் கற்றிடுங்கள் தோல்விகள்,ஏமாற்றங்கள் அனைத்தும் தற்காலிகமானது. வெற்றிக்காக முயலுங்கள். வெற்றி நிச்சயம்..

**3. நான் உயர்தரத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிறேன். பாடசாலை கிரிக்கெட் அணியில் உள்ளேன். எமது பாடசாலை மாணவர்கள் பார்ட்டி வைத்தார்கள் பியரும் குடித்தார்கள். எனக்கும் ஆசையாக இருந்தது. பெற்றோர் பேசுவார்கள் என நான் குடிக்கவில்லை. ஆனால் என் நண்பன் பியர்தானே எனக்குடிக்க வைத்தான். அன்று விபத்துக்கு உள்ளாகிவிட்டேன். தற்போது என் பெற்றோருக்கு நான் செய்த தவறை எண்ணி வேதனை அடைகிறேன். ஆனால் என் அம்மா அன்றிலிருந்து என்னுடன் கதைப்பதில்லை. கவலையாக உள்ளது. அம்மாவை கதைக்க வைப்பீர்களா?**

நீங்கள் செய்த தவறுக்கு நீங்களே தண்டனையை அனுபவித்துள்ளீர்கள். ஆகவே தவறுகளை செய்யமுன் தவறுகள் உருவாகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். அம்மாவின் கோபத்திலும் நியாயம் உள்ளது. தனது மகனை சான்றோனாக வளர்க்க வேண்டும் என நினைக்கும் பெற்றோருக்கு இவ்வாறான விடயங்கள் அதிருப்தியையே கொடுக்கும். உங்கள் தாய் சந்தோசப்படும்படி சான்றோன் எனப் போற்றும்படியான நல்ல செயல்களை செய்து தீயவற்றை நாடாமல் வெற்றிபெறும் போது உங்கள் தாயார் உங்களை மன்னித்து உங்களுடன் கதைப்பார்.

# சீவக சிந்தாமணி

பதைபதைத்துமயங்கி விழுந்த சீவகனுக்கு மூர்ச்சை தெளித்து ஆசிரியர் ஆறுதல் கூறினார். கட்டியங்கரனைக் கொல்வதற்கு சீவகன் சீறி எழுந்தான். ஆசிரியர் அவனை நோக்கி ‘‘மைந்தா இது காலமன்று. இன்னும் ஒரு வருடம் சென்றபின்னர் நீ எண்ணியது செய்க. இப்போது உன்னை வெளிப்படுத்தலாகாது. இது யான் வேண்டுவது’’ என்று கூறினார். சீவகன் ஆசிரியர் கட்டளையை மறுப்பதற்கு அஞ்சி ‘‘அப்படியே ஆகுக’’ என்று உடன்பட்டான்.

பின்பு ஆசிரியர் தன் வரலாறு கூறுவராயினர். யான் முன்பு வெள்ளி மலையில் உள்ள வாரணவாசி என்னும் நகரத்தரசன். உலோகமாபாலன் என்னும் பெயருடையோன். தவஞ்செய்தற்கு எண்ணி மகனுக்கு அரசை அளித்து தவவேடம் புனைந்து நோன்பு புரிகையில் பூர்வ ஜென்ம பாவத்தால் எனக்கு யானைத்தீ என்னும் நோய் உண்டாயிற்று. அதனால் மிகவும் வருந்தினேன். ஒருவற்றானும் தீரப்பெற்றிலேன். இங்கு வந்து நின்னைக்கண்டவுடன் அந்நோய் தீரப்பெற்றேன். ஆதலின் நின்பால் பெருவிருப்புற்று உனக்கு கல்வி அறிவுறுத்தற்கே ஈண்டிருந்தேன். என் எண்ணம் முற்றியது. இனித்தவஞ் செய்வதற்கு செல்ல எண்ணுகிறேன் விடை கொடு. என்றார். சீவகன் அவரைப்பிரிதற்கு சிறிதும் கருதிலனாயினும் அவர் தவஞ் செய்யப்போதற்கு மறுத்தற்கு அஞ்சிச் சம்மதித்தான். அவர் 24 ஆம் தீர்த்தங்கரராகிய ஸ்ரீ வர்த்தமான சுவாமிகளுடைய பாத சரணடைந்து நோன்பியற்றி முத்தியடைந்தார். சீவகன் இராசமாபுரத்தில் இருந்தான்.

**படைக்கலப்பயிற்சி**

இராசமாபுரத்தில் சீவகன் மன்மதன் போல விளங்கினான். அவன் யானைஏற்றம், குதிரை ஏற்றம் இவைகளில் நன்கு பயிற்சி பெறறான். கண்டோர் விரும்பும் வண்ணம் தேரையும் செலுத்தினான். அவனைக்கண்டு மகளிர் வியந்தனர். அவனது வீரத்தைப்போற்றினர்.

**நிரை கவர்தல்**

முல்லை நிலத்தில் ஆநிரைகள் தன் கன்றுகளை நினைத்துப் பாலைச் சொரிந்தன. இளவேனிற்காலமாக இருந்த போதிலும் அங்கு முல்லைக் கொடிகள் பூத்தன. அந்த வேளை வேடர்கள் திரண்டு வந்து ஒரு குன்றின் மேல் கூடினர். பசுக்களைக்கவர்ந்து செல்லச் சூழ்ச்சி செய்தனர். நிமித்திகன் தடுத்ததையும் புறக்கணித்து வேலனை வணங்கினர். பறையும் துடியும் கொட்டி முழக்கினர். ஆயர்கள் பக்கமும் ஒரு நிமித்திகன் வர இருந்த தீங்கினைப்பற்றி கூறினான். வீரர்களை நோக்கி ‘‘நீங்கள் நம் பசுக்களை காப்பீர்களாக என்றான்’’. நிமித்திகன் கூறியதைக்கேட்ட ஆயர்கள் ஆநிரையைக்காக்க விரைந்தனர்.

வேடர்களுக்கும் ஆயர்களுக்கும் இடையில் போர் நிகழ்ந்தது. வேடர்கள் விடுத்த அம்புகள் மழைபோல் பொழிந்தன. அவைகளுக்கு ஆற்றாது அவர்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினர். குழல் கோடாரி ஆகியவற்றை



2

காட்டிலே விடுத்து ஆயர்கள் இடைச்சேரிக்கு விரைந்தனர். ஆய மகளிர் இதனைக்கண்டு வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு புலம்பினர்.

**ஆயர் முறையீடு**

ஆயர்கள் அரண்மனைக்கு ஓடினர். வாயிற்காவலனிடம் செய்தியைச் செப்பினர். அவன் மன்னனிடம் சென்று ஆயர் கூறியவற்றை விண்ணப்பித்தான். மன்னன் கடும் கோபம் கொண்டு ஆநிரையை மீட்டுவர வீரர்களை அனுப்பினான். முரசுகள் முழங்கின. சங்குகள் ஒலித்தன.

நிலம் நடுங்குமாறு படைகள் சென்றன. வேட்டுவ வீரர்களை தாக்கின. பெரும் போர் நிகழ்ந்தது.

வேடர்கள் மன்னனது வீரர்களை சூழ்ந்து தாக்கினர். குதிரைகள் வீழ்ந்தன. தேர்கள் கவிழ்ந்தன. யானைகள் மடிந்தன. எஞ்சிய வீரர்கள் பின்வாங்கினர். போர்க்கருவிகளைக் களத்திலே போட்டுவிட்டு ஓடினர். அதனைக்கண்ட ஆயர்கள் மன்னனிடம் சென்று அறிவித்தனர். கட்டியங்காரன் அதுகேட்டு துயரத்தில் ஆழ்ந்தான். மேற்கொண்டு முயற்சி எதுவும் செய்யவில்லை.

**நந்தகோன் அறிவிப்பு**

ஆயர் தலைவன் நந்தகோன் இதனையறிந்து ''நிரை மீட்டு வருவோர்க்கு என் மகள் கோவிந்தையை தருவேன்'' என்று முரசு அறையச் செய்தான். ஆடவர் எவரும் வேடரை எதிர்க்கத் துணிய வில்லை. சீவகன் இச்செய்தியை அறிந்து வேடரைத்தாக்கி ஆநிரையை மீட்பேன் என்று உறுதி கொண்டான். உடனே போர்க்கோலம் பூண்டு தேரேறிவிரைந்து சென்றான். அவனுடைய வீரர்களும் விரைந்து சென்றனர்.

**சீவகன் வெற்றி**

நிமித்திகன் சொல்லையும் கேளாமல் வேடர்கள் போருக்கு எழுந்தனர். சீவகன் விசையுடன் சென்று வேடர்களை வளைத்துக்கொண்டான். சீவகன் தன் படையை அணிவகுத்துச்சென்றமையால் வேடர்கள் தப்ப முடியவில்லை. சீவகனுக்கு வேடர்கள் பகைவர்கள் அல்லர். ஆநிரைகளை மீட்பதே அவனின் குறிக்கோளாக இருந்தது. எனவே அவன் அவர்களை துன்புறுத்தவில்லை. வில்லையும் அம்பையும் வேடர்கள் கீழே போட்டு விட்டனர். அங்கிருந்து வெளியேறினர். வேடர்களுக்கு யாதொரு தீங்கும் செய்யாது ஆநிரைகளை மீட்டது சீவகனது பெருந்தன்மையைப் புலப்படுத்தியது. இச்செய்தியைக் கேட்டு கட்டியங்காரன் மனவேதனை அடைந்தான். ஆனால் இராசமாபுரத்து மக்கள் சீவகனின் வெற்றி குறித்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.



**நந்தகோன் வேண்டுகோள்**

அப்போது நந்தகோன் சீவகனிடம் வந்து நான் கூறுவதைக்கேள். ''நான் ஆயர் குலத்தில் தோன்றியவன். என் மகள் கோவிந்தையைப் பொற்பாவை ஏழுடனே உனக்குத் தருவேன். அவளை நீ திருமணம் செய்து கொள்க. குலத்தின் தாழ்வைக் கருதாது என் மகளுக்கு மாலை சூட்டுக'' என்று வேண்டினான். சீவகன் அரச குலத்தவர் தம்மினும் தாழ்ந்த குலத்தவரை மணப்பது தகுதியன்று என்று எண்ணினான். எனவே கோவிந்தையை தான் ஏற்று தன் நண்பன் பதுமுகனுக்கு கொடுக்கக் கருதினான். அதனை நந்தகோபனிடம் நயமாக கூறலுற்றான். ''ஐயா நான் தங்களுடைய மகளின் பேரழகை உணர்வேன். தங்கள் குடும்பச்செழிப்பை அறிவேன். ஆயினும் இப்போதுள்ள நிலையில் நான் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை. ஆகவே பொறுத்தருள்க தங்கள் புதல்வியை என் ஆருயிர் நண்பனுக்கு மணமுடிக்கத் தீர்மானித்துள்ளேன். பதுமுகன் எனக்கு சமனானவன் ஒப்புக்கொள்ள வேண்டுகிறேன்'' என்றான்.

**திருமணம்**

''சீவகன் உன் விருப்பம் அதுவானால் நான் தடை சொல்வதற்கில்லை. அங்ஙனமே ஆகட்டும்'' என்றான் நந்தகோன். திருமணத்திற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றன. பதுமுகனுக்கும் கோவிந்தைக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. நந்தகோன் கோவிந்தைக்கு பல பசுக்களையும் ஏழு பொற்பாவை களையும் பரிசாகக் கொடுத்தான். பதுமுகன் கோவிந்தையின் அழகைப்பாராட்டினான். அவளுடன் இனிதே இல்லறம் நடத்தினான்.

**(தொடரும்)**

# Review of English tense (Practice)

| | |
|---|---|
| Action that is repeated every Friday. Habitual action. | I visit my uncle *every Friday* |
| Facts that are believed to be true. Generalizations | Cats hate mice. The sun rises in the morning. |
| Scheduled events in the near future | The plane takes off at 10 o'clock to night |

| **Explanations** | **Present Progressive** |
|---|---|
| Action that takes place now / at the moment | I am working on my computer |
| Near future | I am leaving tomorrow |

| **Explanations** | **Present Perfect** |
|---|---|
| To talk about experiences | I have been to Italy. |
| Past action that has the result in the present. | She has read that book. |
| Action which started in the past and continued up to now. | I have lived in this town for 12 years. |

| **Explanations** | **Present Perfect Progressive** |
|---|---|
| To show that something started in the past and has continued up until now. | He has been sleeping for the last 3 hours |
| To talk about an **action** that started in the past and stopped recently. | The grass is wet because it has been raining all day long. |
| To talk about an **action** that started in the past and is continuing **now**. | I have been watching TV for 2 hours / since you left. |

| **Explanations** | **Past Simple** |
|---|---|
| Completed action in the past. | She left yesterday. |
| To talk about an **action** that started in the past and stopped recently. | She woke up, had a shower and left. |
| To talk about an **action** that started in the past and is continuing **now**. | If I ***had*** a million dollar, I would help the poor. |
| An action taking place in the middle of another action. | She was playing when the accident ***occurred***. |

| **Explanations** | **Past Progressive** |
|---|---|
| Actions happening at the same time in the past. | He was reading a newspaper while his wife was preparing dinner. |

| | |
|---|---|
| Interrupted action in the past. | She ***was reading a book*** when the light went off. |

| **Explanations** | **Past Perfect Simple** |
|---|---|
| Completed action before another action in the past. | She ***had left*** when I arrived. |

| **Explanations** | **Past Perfect Progressive** |
|---|---|
| To show that something started in the past and continued up until another action stopped it. | They had been playing soccer when the accident occurred |
| To show that something started in the past and continued up until another time in the past. | I had been living in that town for ten years before I moved to New York. |
| We use the Past Perfect Continuous before another action in the past to show cause and effect. | I was so tired. I had been working for 6 hours. |

| **Explanations** | **Future Simple** |
|---|---|
| Instant decisions | I've left the door open; I***'ll close*** it. |
| We use the simple future , when we predict a future situation | She***'ll pass*** the exam. She's working hard. |
| We use the simple future with: "I (don't) think...", "I expect...", "I am sure...", "I wonder...", "probably". | It ***will*** *probably* ***rain*** tonight |
| Conditional sentence type one | If I have enough time, I***'ll watch*** the film. |

| **Explanations** | **Future Progressive** |
|---|---|
| Action that will be taking place at some time in the future. | When you arrive, I**'ll be sleeping** . |

| **Explanations** | **Future Perfect** |
|---|---|
| Completed action before another action in the past | By tomorrow, I will have finished the work. |

| **Explanations** | **Future Perfect Progressive** |
|---|---|
| It is used to show that an action will continue up until a particular event or time in the future. | She **will have been working** for over 8 hours by the time her children arrive. |

## Form of the imperative

The imperative form is the same as the *bare infinitive*. It has only one form for both second person singular and plural ***'you'***

Examples:

- *hurry up*; you'll be late
- *go out* immediately

In the negative form you add *'do not'* or ***'don't'***

Examples:

- *Don't disturb* me; I'm working.
- *Do not smoke*!

## Use of the imperative

You can use the imperative to give instructions, commands, advice or to invite:

1. To give instructions
   - *Push* the button
   - *Turn* left
2. To give commands
   - *Stop* saying nonesense
   - *don't lie.*
3. To give advice
   - *Go* to hospital; you are ill
   - *Tell* her that you love her
4. To invite
   - Please, *come* to the party
   - *Have* a drink

## Use of the emphatic do with the imperative

You can use *'do'* before the imperative to emphasize what you want to say:

Example:

- *Do write down* your name.
- *Do think* of our offer.

பள்ளி வாழ்க்கை

“என்னை மறந்துவிட்டாயா?” என்று கேட்டாள் சோபா

“இல்லை” என கீதா தலையசைத்து கொண்டிருந்த போது வகுப்பாசிரியர் யோகா உள்ளே நுழைந்தார். வகுப்பிலுள்ள அனைவரும் திடீரென எழுந்து நின்று “வணக்கம் ஆசிரியர்” என கூறினர். கீதாவும் அவர்களுடன் எழுந்து நின்று வணக்கம் கூறினாள்.

ஆசிரியை யோகாவையே கண்வெட்டாமல் பார்த்தாள் கீதா. ஏனெனில் ஏதோ ஒரு ஈர்ப்பு சக்தி அந்த ஆசிரியையிடம் மாணவர்களுக்கு இருந்தது. ஆங்கிலப்பாடம் என்றாலே கசப்பான பாடமாக மாணவர்கள் கற்பதுண்டு. ஆனால் அந்த




ஆசிரியையின் ஆங்கில பாடவேளையில் அனைத்து மாணவர்களின் முகங்களும் பிரகாசமாக இருப்பதை பார்த்து கீதா ஆச்சரியப்பட்டாள். சந்தோசமான பாடவேளையாக அது நகர்ந்தது. பெண் கடவுள் போன்று ஒரு அழகான ஆசிரியை பாடம் நடத்துகிறாள் என்பதாலா அல்லது அன்பாக அனைவருக்கும் விளங்கும் வகையில் ஆங்கிலத்தை கற்பிக்கிறார் என்பதாலா இத்தகைய மாற்றம் என கீதா சிந்தித்தாள். அதுவரை பெண்கள் பாடசாலையில் கல்வி கற்ற கீதாவுக்கு தற்போது கலவன் பாடசாலையில் படிப்பது புது அனுபவமாகவே இருந்தது. தொடர்ந்து ஒவ்வொரு பாடவேளைகளிலும் ஆசிரியர்கள் வந்து சென்றனர். ஒவ்வொரு ஆசிரியர்களும் ஒவ்வொரு விதமாக இருந்தனர். அனைவரிலும் யோகா ஆசிரியையே அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

மறுநாள் காலை அவள் பாடசாலைக்கு வந்தபோது கீதாவின் வகுப்புத்தோழி சோபா அவளுக்கான கதிரை மேசை போன்ற அனைத்தையும் சுத்தம் செய்து எடுத்து வந்து போட்டிருந்தாள்.

## வலி சுமந்த நிஜங்கள்

“தங்ஸ் சோபா, எனக்காக கஷ்டப்பட்டு காலையில் வந்து கதிரை மேசை தேடினாயா” என கேட்ட கீதாவை புன்னகையுடன் பார்த்தாள் சோபா. சிறிது மௌனம். அந்தக்கணப்பொழுதில் அவர்களுடைய முன்னைய பாடசாலை வாழ்க்கை கண் முன்னே ஓடியது. இருவரின் கண்களும் கலங்கின. அந்த நிலைமையை மாற்றுவதற்காக “வீட்டுப்பாடம் செய்துவிட்டாயா” என கீதாவிடம் சோபா கேட்டாள்.

- துவாரகா

“ஆம்”என தலையசைத்தாள் கீதா. கணித பாடம் என்றால் கீதாவிற்கு விருப்பம். “வீட்டுப்பாடத்தையும் பாடசாலையில் வைத்தே செய்துவிட்டேன்”. என்று கூறினாள் கீதா. நாளாந்தம் பாடசாலை வாழ்க்கை சந்தோசமாகவே கழிந்தது. அவர்களின் நட்பும் வளர்ந்தது.

இடப்பெயர்வினால் பல பாடசாலைகளில் கல்வி கற்ற அனுபவம் அவர்களிடையே ஒரு முதிர்ச்சியை கொடுத்தது. ஆசிரியர்களின் வெவ்வேறுபட்ட தன்மையினால் ஒவ்வொரு பாடசாலைகளிலும் வெவ்வேறான செயற்பாடுகளே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை அந்த சிறிய வயதிலும் உணர்ந்து கொண்டனர். எனினும் கல்வியில் முதலிடம் பெற்று சிறந்து விளங்கிய கீதாவிற்கு அந்தப்பாடசாலையில் நடைபெற்ற சில செயற்பாடுகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் போனது. வன்னிப்பிரதேசமானது ஒரு பின்தங்கிய பிரதேசமாகவே ஆரம்பத்தில் இருந்தது. எனவே அந்த மாணவர்களிற்கு கல்வி கற்பித்து பழக்கப்பட்ட ஆசிரியர்களில் ஒரு சிலர் தொடர்ந்தும் அவ்வாறான கற்பித்தலிலேயே ஈடுபட்டனர். இதனால் கீதாவின் திறமைகள் சில அடக்கப்பட்டன. கீதா அவ்வாறான ஆசிரியர்களால் உள ரீதியாக தாக்கப்பட்டாள்.

அன்று கணித பாட ஆசிரியர் கற்பித்துக் கொண்டிருந்தார். நிறுவல் பகுதி கீதாவிற்கு விருப்பமான ஒன்று. கணிதபாட ஆசிரியர் கரும்பலகையில் ஒரு கணக்கை எழுதி செய்யும்படி மாணவர்களிடம் கூறினார். மாணவர்கள் செய்து முடித்ததும் ஒருவர் மாறி மற்றவர்களிடம் திருத்தும்படி கொப்பியை மாற்றிக் கையளித்தார். பின்னர் கரும்பலகையில் விளங்கப்படுத்த

தொடங்கினார். அந்தப்பகுதியை நிறுவிக்கொண்டு சென்றவர் திடீரென கணக்கை செய்ய முடியாமல் யோசித்துக்கொண்டு நின்றார். சில நிமிடங்கள் சென்றதும் கீதா எழுந்து நின்றாள்.

"சேர் நான் சரியாக செய்து நிறுவினேன்" எனக் கூறி கொப்பியை கொடுத்து செய்த முறையை காட்டினாள். எதுவுமறியாது தன் திறமையை இயல்பாக வெளிப்படுத்த தொடங்கியதால் சிக்கலில் மாட்டிக்கொண்டாள். அவள் செய்த நிறுவல் கணக்கை சரி என ஒத்துக்கொண்ட ஆசிரியர் சக்தி வடிவேல் "முன்பு எந்தப்பாடசாலையில் கல்வி கற்றாய்" என அவளிடம் கேட்டார். அவளும் தன் முன்னைய பாடசாலையை பெருமைப்படுத்த விரும்புகிறார் என எண்ணி உயர்தர பெண்கள் பாடசாலையின் பெயரை கூறினாள். ஆனால் ஆசிரியை சக்தி வடிவேல் அவர்களோ அவளின் முன்னைய பாடசாலையைப்பற்றி கேலி செய்தார். "அது திமிர் பிடித்த பள்ளிக்கூடம்" என பேசினார். இது அவளது உள்ளத்தைக் காயப்படுத்தியது. ஆசிரியை வடிவேல் அவளைத் தனது மாணவியாக எண்ண வில்லை. அன்றிலிருந்து தனக்கு போட்டியாக வந்துள்ள ஒருவராக பார்க்கத் தொடங்கினார். நாட்கள் கடந்தன. வடிவேலுபாணியிலும் பல நையாண்டிகளை கிளப்பிவிடுவார். கணித பாட ஆசிரியரினால் அவளுக்கு அந்த பாடத்தில் வெறுப்பு ஏற்பட்டது. எனினும் அவள் தனது திறமையை அடக்க விரும்பவில்லை. கணித பாடத்தில் எப்பொழுதும் உயர் புள்ளிகள் அவளுக்கு தான். நாட்கள் கடந்தன.

கணித பாட ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்தார். திடீரென ஒரு இலகுவான கணக்கை கரும்பலகையில் எழுதினார். சற்று உரத்த தொனியில் கீதாவை எழுப்பி விடையை கூறுமாறு சொன்னபோது கீதா நிலை தடுமாறிவிட்டாள். தடுமாற்றத்தில் பிழையாக கூறிவிட்டாள். ஆசிரியர் கோபத்துடன் எழுந்து மேசைக்கு மேல் ஏறும்படி அவளிடம் கூறினார். கீதாவிற்கு அந்தத் தண்டனை மிக அதிகமாகவே பட்டது. ஏற மறுத்தாள். "ஆசிரியரைவிட கூடத்தெரியும் என்று உனக்கு தலைக்கணம் வந்துவிட்டது" என்று கீதாவை அனைத்து மாணவர்களின் முன்னால் மேசையில் ஏறும்படி வற்புறுத்தினார். கீதாவோ தனது கௌரவத்தை இழக்கத்தயாராகவில்லை. இதனால் தனது சொல்லைக்கேட்கவில்லை என வகுப்பறையினைவிட்டு வெளியேறினார் ஆசிரியர்.



வகுப்பறையில் என்ன பிரச்சினை ஏற்பட்டாலும் வகுப்பு ஆசிரியை யோகா வந்து கல்வி கற்பித்தால் அனைத்து பிரச்சினைகளும் மறந்து மாணவர்களின் மனதில் அமைதி குடிகொண்டு விடும். பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் சிலர் மாணவர்களின் உள்ளத்தை அறிந்து நடந்து கொள்ளவில்லை. வார்த்தைகளால் உள்ளங்களை காயப்படுத்துவதும் அடிப்பதுமே மாணவர்களுக்கு வழங்கும் சிறந்த தண்டனையாக சில ஆசிரியர்கள் எண்ணினார்கள். எனவே அந்தப்பாடசாலையில் யோகா ஆசிரியையை தமது அன்னையாகவும் தோழியாகவும் மாணவர்கள் நினைக்கத் தொடங்கினர். மாணவர்களிற்கு அன்பையும் ஆதரவையும் கொடுத்து உளரீதியாக ஆற்றுப்படுத்தி அவர்களை கல்வியில் சிறந்தோங்கச் செய்யவேண்டும் என்பதற்காக ஆசிரியை யோகா அயராது பாடுபட்டார்

**(தொடரும்)**

# கணினி வன்பொருட்கள் (computer hardware)

**பட்டைக்குறி வாசிப்பான்** (Bar code reader)



பட்டைக்குறி வாசிப்பான் ஆனது லேசர் கதிர்களை பட்டைக்குறிமேல் செலுத்தி பொருள் பற்றிய தகவலை கணினிக்கு வழங்கும். இது ஒரு பொருள் பற்றிய தகவல்களை அறிய உதவும். இதில் மெல்லிய தடித்த கோடுகள் காணப்படும். தடித்த கோடுகள் 1 ஐயும் மெல்லிய கோடுகள் 0 ஐயும் குறிக்கும்.

**கைரேகை வாசிப்பான்** (finger print reader)



கைரேகை அடையாள மானது ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவ மானது. எனவே ஒரு மனிதனைப்பற்றிய தகவலைப்பதிவதற்கு கைரேகை அடையாளம் பதியப்படுகிறது. கைரேகை வாசிப்பான் ஆனது ஒரு மனிதனின் கைவிரல் அடையாளத்தை கணினிக்கு உட்செலுத்த உதவுகிறது.

**இலக்கமுறைப்புகைப்படக் கருவி** (Digital camera)




இலக்க முறைப் புகைப்படக் கருவியானது புகைப்படம் எடுக்கவும் கணினிக்கு படங்களை உட்செலுத்த வும் உதவும். இதனைப்பயன்படுத்தி புகைப்படங்கள் எடுக்கும் போது புகைப்படச்சுருள் தேவையில்லை. படங்கள் digital வடிவில் இருப்பதால் உடனடியாக இணையத்தில் அனுப்புதல், இலகுவாக சேமிப்புக் கருவிகளில் சேமித்தல் போன்ற செயற்பாடுகளை செய்ய முடியும்.

**நுணுக்குப்பன்னி** (micro phone)



இது கணினிக்கு ஒளியை உள்ளீடு செய்ய பயன்படுத்தப் படுகிறது. அத்துடன் இணையத் தொலைபேசி, இணையத்தில் ஒளி அரட்டை (voice chatting) செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

**மின்னனு விற்பனைப்புள்ளி** (Point of sale terminal)



இது வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும். விற்பனைப்பொருட்கள் வாடிக்கையாளர் வரி என்பன தொடர்பான தகவல்களை கணினிக்கு உட்செலுத்தப்பயன்படும். வியாபார நிலையங்களில் பல POS கருவிகள் ஒரு பிரதான கருவியுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

**ஒளியியல் குறி வாசிப்பி** (Optical mark reader)- OMR




இது பல் தேர்வு வினாக்களை திருத்துவதற்கும் விண்ணப்பப்படிவங்களின் தகவல்களை உள்ளீடு செய்வதற்கும் பயன்படும்.

**தொடுகைத்திரை** (Touch screen)



தொடுகைத்திரையில் தொடுகைமூலம் Curser இன் தெரிவு கள், அசைவுகள் என்பவற்றை மேற்கொள்ள முடியும்.

**காந்த கையெழுத்து வாசிப்பி**

(Magnetic ink charactor recognition)- MICR

இது வாடிக்கையாளர்களால் வங்கிகளில் வைப்பிலிடப்படும் பிற வங்கிகளின் காசோலைகளை தரம்பிரிக்க பயன்படுத்தப்படுகிறது. வங்கிகளில் காசோலையை தரம் பிரிக்க பயன்படும் மையானது வேறுபட்ட காந்தத் தன்மை யுடையனவாக இருக்கும் காந்தப் பொருட்களின் தன்மையை இனம் கண்டு காசோலை களை தரம் பிரிக்க முடியும்.



# நாட்டார் இலக்கியம்

வாய்மொழி இலக்கியம் என்றும் மக்கள் இலக்கியம் என்றும் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படும் நாட்டார் இலக்கியம் நமது முன்னோர் எமக்களித்த முதுசொங்களுள் ஒன்றாகும்.

தமிழின் மிகத் தொன்மையான இலக்கண நூலாகக் கொள்ளப்படுகின்ற தொல்காப்பியத்தில் வாய்மொழி என்ற பெயரில் இவ்விலக்கியங்கள் குறித்துக்காட்டப் பட்டுள்ளன. இவை பெரும்பாலும் ஒலிகளையும் சொற்களையும் ஒரு வித ஓசை அமைப்புக்கு உட்படுத்திப் படைக்கப்பட்டவையாகக் காணப்படும்.

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை இப்பாடல்களின் பயன்பாடு உண்டு.



பிறப்பில் தாலாட்டுடன் தொடங்கும் வாழ்க்கை இறப்பில் ஒப்பாரியுடன் நிறைவு பெறுகின்றது. இடையில் தொழில் செய்யும் போது தொழில்களுக்குரிய பாடல்கள், பயணத்தின் போது வண்டியோட்டும் பாடல்கள், காதல் கொள்ளும் சந்தர்ப் பத்தில் காதற் பாடல்கள், நகைச்சுவையின் போது வேடிக்கைப் பாடல்கள் என பல்வேறு வகைப் பாடல்கள் நாட்டார் பாடல்களுள் அடங்குகின்றன.

காலங்காலமாக வாய்மொழி மரபில் பயிலப்பட்டு வரும் பழமொழிகள் விடுகதைகள் என்பனவும் நாட்டார் இலக்கியத்திற்குள்ளேயே அடங்கும். இதைவிட நாட்டார் வழக்காற்றியல் (Falklore) என்ற சொல்லில் பல நாட்டாரியல் சார்ந்த கூறுகள் அடங்குகின்றன. பாடல்கள், கதைகள், மரபுவழிச் சடங்குகள், மூடநம்பிக்கைகள் என்பனவும் இவற்றுள் அடங்கும். ஆக, எழுத்து வழக்கற்ற வாய்மொழி மரபு சார்ந்த இலக்கியங்கள் எல்லாம் நாட்டார் இலக்கியங்களாகக் கொள்ளப்படக்கூடியன ஆகும்.



ச.லீசன்
பிரதி முதல்வர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

உலக மொழிகளுள் வாய்மொழி மரபு வளர்ந்த பின்னரே எழுத்தியல் மரபு வளர்ந்தது என்பது மொழி வரலாற்று அறிஞர்களின் துணிபு ஆகும்.

என்பது தொல்காப்பியத்தின் நூற்பா ஆகும்.

வாய்மொழி, பிசி, முதுசொல் என்பன வாய்மொழி இலக்கிய வகையைச் சார்ந்தன என உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் நாட்டார் பாடல்களை அடியொற்றிய பல பாடல்கள் உள்ளன. கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை போன்ற பகுதிகளில் இவற்றைக் காணலாம்.

திருவாசகத்தில் அம்மானை, உந்தியார், கோத்தும்பி, சாழல், தெள்ளேணம், பூவல்லி, பொற்சுண்ணம், பொன்னூசல் முதலியன கிராமிய விளையாட்டு வடிவங்களுக்குக் கொடுக்கப்பட்ட இலக்கிய உயர்ச்சி ஆகும்.

நெல்குற்றும் போது பாடும் பாடலை வள்ளப்பாட்டு என முற்காலத்தில் அழைத்தனர்.

**தீங்கரும்பு நல் உலக்கை ஆகச் செழுமுத்தம்**
**பூங்காஞ்சி நீழல் அளவப்பார் புகார் மகளிர்**
**ஆழிக்கொழத் திண்தேர் செம்பியன் வம்பு அலர்தார்**
**பாழித் தடவரைத்தோள் பாடலே பாடல்**

**பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்**

என்பது சிலப்பதிகாரத்தில் வரும் அடிகளாகும்.

குழந்தை பிறந்தவுடன் தாலாட்டுப் பாடல் பாடும் மரபும் மருத்துவிச்சி வாழ்த்துப்பாடும் மரபும் காணப்படுகின்றது.

**ஆராரோ ஆரிவரோ ஆரடித்து நீ அழுதாய்**

**அடித்தாரைச் சொல்லியழு**

**ஆக்கினைகள் செய்து வைப்போம்.**

என்ற தாலாட்டுப் பாடலும்

**அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி**

**அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி**

என்ற மருத்துவிச்சி வாழ்த்துப் பாடலும் எங்கள் நாட்டு நாட்டார் பாடல்களுள் பிரபலமானவை.

சீரான வாழ்விற்கான ஆசீர்வாதம் இப்பாடல்களுள் பொதிந்திருப்பதைக் காணமுடிகின்றது.

தொழில் பாடல்கள் தொழில் செய்வோரின் களைப்பைப் போக்குவதாகவும் சுறுசுறுப்பை நல்குவதாகவும் அமைந்திருப்பதைக் காணலாம்

ஏலேலோ ஐலசா ஏலேலோ ஐலசா என பாடல் மெட்டு அமையும் போது கரைவலை இழுப்போரின் களைப்பு போய்விடுகின்றது.

**என்ன பிடிக்கிறாய் அந்தோனி**

**எலி பிடிக்கிறன் சிஞ்ஞாரே**

**பொத்திப் பொத்திப் பிடி அந்தோனி**

**பீறிக் கொண்டோடுது சிஞ்ஞாரே**

எனப் பாடும் போது போர்த்துக்கேயரை எள்ளி நகையாடும் பண்பு வெளிப்படுகின்றது.

**கச்சான் அடித்தபின்பு காட்டிலே மரம் நின்றதுபோல்**

**உச்சியிலே நாலுமயிர் ஓரமெல்லாம் தான் வழுக்கை**

**கண்ணுமொரு பொட்டை காதும் செவிடாகும்**

**குருத்தெடுத்த வாழைபோல அவர் கூனிவளைந்**

**திருப்பார்**

**நாணற் பூப்போல நரை நரைத்த கிழவனுக்குக்**

**கும்மாளம் பூப்போல இந்தக் குமர்தானோ வாழுறது**

என்ற பாடல் பெண்ணின் நிலை கண்டு வெளிப்படுத்தும் ஏக்கப்பெருமூச்சாக அமைந்துள்ளது. வயதில் முதிர்ந்த கிழவன் ஒருவனுக்கு இளம் கன்னி ஒருத்தியை வாழ்க்கைத் துணையாக்குவதில் உள்ள கொடுமையை இப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

சிறந்த நாட்டுப்புறப் பாடல்கள் திரையிசைப் பாடல்களாகவும் வெளிவந்துள்ளன.

**பாடறியேன் படிப்பறியேன் பள்ளிக்கூடம் தானறியேன்**

**ஏடறியேன் எழுத்தறியேன் எழுதும் வகை நானறியேன்**

என்ற பாடலின் பிரபலத்தை அனைவரும் அறிவர். இதேபோல

**மானூத்து மந்தையிலே மாங்குட்டி பெத்த மயிலே**

என்பது தமிழகத்தின் பிரபல நாட்டார் பாடல் ஆகும்.



இது ஏ.ஆர் ரகுமான் இசையில் பிரபல திரையிசைப் பாடலாக வெளிவந்துள்ளது.

இவ்வாறு பல நாட்டுப்புறப் பாடல்கள் திரையிசைப்பாடல்களாக மலர்ந்துள்ளன.

தமிழகத்தில் தொழில்சார் நாட்டுப்புறப்பாடகர்கள் உள்ளனர். கலாநிதி புஷ்பவனம் குப்புசாமி, அனித்தா குப்புசாமி போன்றோர் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆவர்.

இலங்கையில் நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிய ஆய்வுகள் போதியளவில் இடம்பெறவில்லை. பேராசிரியர் சு. வித்தியானந்தன்,கலாநிதி இ.பாலசுந்தரம், எஸ். முத்துமீரான், பேராசிரியர் கி. விசாகரூபன், வல்லை ந.அனந்தராஜ், ஈழவாணி போன்றவர்கள் மேற்கொண்ட ஆய்வு முயற்சிகள் மற்றும் தொகுப்பாக்க முயற்சிகள் விதந்து குறிப்பிடத்தக்கனவாகும். செய்தவர்கள் சில தமிழறிஞர்கள் உள்ளனரே ஆயினும் இதனை வளர்த்தெடுக்கும் பண்பு முனைப்புப் பெறவில்லை.

கருவறை முதல் கல்லறை வரை எமது வாழ்வியலைப் பிரதிபலிக்கும் நாட்டார் இலக்கியங்கள் எமது முன்னோர் எமக்களித்த முதுசொங்களாகும். இவற்றைப் பேணிப்பாதுகாப்போம்.

# சதுரங்கம் விளையாடுவோமா?

**படை வீரன்** (Pawn)

முதல் தடவையாக மாத்திரம் முன்னாக இரு சதுரங் களை தாண்டலாம். அடுத்தடுத்து முன்னோக்கி ஒரு சதுரத்திற்கே நகரலாம். ஆனால் இன்னொரு காயை அழிப்பதானால் குறுக்கு வழியாகவே இரு புறமாகவும் தாக்குதலை புரியலாம். அதன் பின்னர் நேராகவே நகர முடியும். ஆனால், தாக்குதலில் இருந்து தப்பும் நோக்கில் ஆரம்ப நிலையில் இருந்து இரு சதுரங்கள் நகரமுடியாது. மேலும் இக்காயை எதிராளியின் கடைசி எல்லை வரை நகர்த்தி விட்டால் ஏனைய காய்களின் தரத்திற்கு இவற்றை உயர்த்திப் பயன்படுத்தலாம். ஆனால் எச்சூழ்நிலையிலும் பின்னோக்கி நகர முடியாது.மேலும் இவ்விளையாட்டில் ஆட்டக்காரர் ஒரு காயை தொட்டு விடுவாரேயானால் முன்னர் இருந்த இடத்தில் திருப்பி வைக்க முடியாது அதனை நகர்த்தியே ஆகவேண்டும்.

**கேஸ்ட்லிங்**

கேஸ்ட்லிங் என்பது ராஜாவை யானையை நோக்கி இரண்டு சதுரங்கள் நகர்த்தி, பின்னர் அந்த யானையை ராஜாவின் மற்றொரு பக்கத்தில் அதற்கு அருகில் வைப்பது ஆகும். கேஸ்ட்லிங் ஆனது பின்வரும் அனைத்து கட்டுப்பாடுகளையும் நிறைவு செய்தால் மட்டுமே அனுமதிக்கப்படும்:

1.கேஸ்ட்லிங்கில் தொடர்புடைய ராஜாவும் யானையும் ஆட்டத்தில் அதற்கு முன்பு நகர்த்தப்பட்டிருக்கக் கூடாது.

2.ராஜாவுக்கும் யானைக்கும் இடையில் எந்த காய்களும் இருக்கக்கூடாது

3.நகர்த்தும் போது ராஜா செக்கில் இருக்கக் கூடாது. ராஜாவை நகர்த்தும் இறுதி சதுரத்திற்கு இடையில் எதிரியின் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய சதுரங்கள் இருக்கக் கூடாது (எனினும் யானையை தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய சதுரங்களைக் கடந்து செல்லவும் அத்தகைய சதுரத்தில் வைப்பதற்கும் அனுமதி உண்டு)



4.ராஜா மற்றும் யானை இரண்டும் ஒரே வரிசையில் இருக்க வேண்டும்.

**என் பஸ்ஸண்ட்**

ஆட்டக்காரர் A இன் சிப்பாயை இரண்டு சதுரங்கள் முன்னோக்கி நகர்த்தும் போது ஆட்டக்காரர் B இன் ஒரு சிப்பாய் அதற்கு அருகில் உள்ள நிரலின் ஐந்தாவது வரிசையில் இருந்தால், A இன் சிப்பாய் ஒரே ஒரு சதுரம் மட்டுமே நகர்த்தப்பட்டால் B இன் சிப்பாயினால் A இன் சிப்பாய் கைப்பற்றப்படலாம். இந்தக் கைப்பற்றுதலை வைக்கப்பட்ட பின்னர் அடுத்த உடனடி நகர்வில் மட்டுமே செய்யமுடியும். இந்த எடுத்துக்காட்டில், வெள்ளைச் சிப்பாய் a2 இல் இருந்து a4 க்கு நகர்த்தப்பட்டால், b4 இல் இருக்கும் கறுப்புச் சிப்பாய் என் பஸ்ஸண்ட் a3 இல் நிறைவடைந்தால் கைப்பற்றப்படலாம்.

**சிப்பாய் பதவி உயர்வு**




சிப்பாயானது அதன் எட்டு வரிசைகளை நிறைவு செய்தால், பின்னர் அது அதே நிறத்தில் உள்ள ராணி, யானை, மந்திரி அல்லது குதிரை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றாக உயர்த்தப்படுகிறது (மாற்றப்படுகிறது). அதனைத் தேர்ந்தெடுப்பது விளையாடுபவரின் விவேகத்தைச் சார்ந்தது (பொதுவாக ராணி தேர்ந்தெடுக்கப்படுகிறது). ஆனால் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு ஏற்கனவே கைப்பற்றப்பட்டிருக்கும் காய்களில் ஒன்றாகத் தான் இருக்க வேண்டும் என வரையறுக்கப் பட்டிருக்கிறது. இல்லையெனில் தர்க்க ரீதியாக, ஒரு ஆட்டக்காரர் அவரது அனைத்து சிப்பாய்களையும் முன்னேற்றி இவ்வாறு உயர்த்தினால் அவருக்கு ஒன்பது ராணிகள் அல்லது பத்து யானைகள், மந்திரிகள் அல்லது குதிரைகள் இருப்பதற்கு சாத்தியம் ஏற்படலாம். தேவைப்பட்ட காயானது கிடைக்கவில்லை என்றால், ஆட்டக்காரர் அந்த காயினைப் பெறுவதற்காக நடுவரை அழைக்க வேண்டும்.

(தொடரும்)




## நவீனகால உலக அதிசயங்கள்

எகிப்து பிரமிட் - மெக்ஸிக்கோ
சீனப்பெருஞ்சுவர் - சீனா
தாஜ்மஹால் - ஆக்ராவின் ஜமுனைநதிக்கரை
மாச்சுபிச்சு - பெருநாட்டின் உருபாம்பா சமவெளியில்
இரட்சகன் யேசு - பிரேசில்
கொலாஸியம் - ரோம்
பெட்ரா மாளிகை - ஜோர்தான்
சுதந்திரதேவிச்சிலை - நியூயோர்க்

நோபல் பரிசு பெற்ற முதல் தமிழர் - C.V ராமன்
நள்ளிரவில் சூரிய உதய நாடு - நோர்வே
அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலம்- வெள்ளைமாளிகை
உலகின் முதல் தோன்றிய இலக்கியம் - இராமாயணம்
உலக மொழிகளின் தாய் - சமஸ்கிருதம்

## இணையம்

**உலகிலுள்ள பல கணிப்பொறிகளை ஒன்றாக இணைப்பது** - இணையம்
**செல்போன்களில் இடம்பெற்றுள்ள # என்ற குறியீட்டுக்கு பெயர்** - ஒக்டோதார்ப்
**பல மில்லியன் கட்டுரைகளை தன்னகத்தே கொண்டு இணையத்தின் இலவச தகவல் களஞ்சியமாக விளங்குவது** - விக்கிபீடியா
கணினியை உபயோகித்து இணையத்தின் கடிதத்தை வேறுஇடத்திற்கு அனுப்புவதை ஈமெயில் என அழைப்போம்.

### விண்வெளி

நவீன விண்வெளி யுகத்தின் தந்தை - சியோல் கோவ்ஸ்கி
சூரியன் ஒரு நட்சத்திரம்
சூரியன் ஹட்ரஜன் ஹீலியம் வாயுக்களால் ஆனது
ஒளி ஒரு வருடத்தில் செல்லும் தூரம் ஒளியாண்டு

### சர்வதேச குறியீடுகள்

**வெண்புறா** - சமாதானம்
**ஆபத்து,** சிவப்பு - மருத்துவமனை, நிறுத்து
**கறுப்பு கொடி** - எதிர்ப்பு, சோகம்,மரணம்
**சிவப்பு கொடி** – புரட்சி
**தலைகீழான கொடி** - துன்பம்
**உடைந்த கைவிலங்குடன் இருகைகள்** - விடுதலை

### சர்வதேசதினங்கள்

மே1 - உலக தொழிலாளர்தினம்
மே17 - உலக தகவல் தொடர்பு தினம்
மே31 - சர்வதேச புகைத்தல்போதை எதிர்ப்பு தினம்
யூன்5 - சர்வதேச சுற்றுச்சூழல் தினம்
யூன் 26- சர்வதேச நல்லொழுக்கதினம்



### இலங்கைத்தகவல்கள்

உத்தியோகபூர்வ வதிவிடங்களும் விசேட பெயர்களும்

**ஜனாதிபதி** - ஜனாதிபதி மாளிகை
**பிரதமர்** - அலரிமாளிகை
**சபாநாயகர்** - மும்தாஜ்மகால்
**இசுருபாய** - கல்விஅமைச்சு
**சௌசிரிபாய** - சுகாதார அமைச்சு
**சம்பத்பாய** - காணிஅமைச்சு
**செத்சிரிபாய** - திட்ட அமுலாக்கல் அமைச்சு, போக்குவரத்து அமைச்சு
**தஹம்பாய** - மதவிவகார அமைச்சு
**முதலாவது சூரியசக்தி மின்உற்பத்தி நிலையம் அமைந்துள்ள இடம்** - அம்பாந்தோட்டை
**முதலாவது அனல் மின்சாரநிலையம் அமைந்துள்ள இடம்** - புத்தளம், நுரைச்சோலை

# ஜன்னலில் சின்னஞ் சிறிய சிறுமி

டெட்சுகோ குரோயாநாகி

டீச்சர் தன்னையே சிறிது சமாதானப்படுத்திக் கொண்டு அம்மாவை நேரடியாக பார்த்தாள். “நேற்று டோட்டோசான் வழக்கம் போல ஜன்னலில் நின்று கொண்டிருந்தாள். திடீரென யாரையோ அழைத்து என்ன செய்து கொண்டிருக்கின்றாய்?” என்றாள். நான் அவள் யாருடன் பேசிக்கொண்டி ருக்கிறாள் என ஆச்சரியப்பட்டேன். கண்டிப்பாக தெருவில் செல்பவர்களிடம் பேசவில்லை. ஆனால் எங்கோ உயரத்தில் இருந்த யாரிடமோ பேசினாள் விநோதமாக இருந்தது. பதில் வருகிறதா என



அவதானித்துப்பார்த்தேன். பதில் வரவில்லை. எனவே நான் அருகில் சென்று பார்த்தேன். ஒரு ஜோடி தூக்கணாங்குருவி வகுப்பறையின் சாய்ப்புக் கூரையில் தனது கூட்டை அமைத்துக்கொண்டிருப் பதை பார்த்தேன். அவள் குருவியிடமே பேசிக் கொண்டிருந்தாள். எனக்கும் குழந்தைகளைப்பற்றி புரியும் அதனால் குருவிகளிடம் பேசுவது முட்டாள் தனமானது என ஒரேயடியாக சொல்ல மாட்டேன். ஆனால் நான் பாடம் படிப்பித்துக்கொண்டிருக்கும் போது இடையில் எழுந்து சென்று என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்பது கொஞ்சம் கூட தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

அம்மா நடந்ததிற்காக வருத்தம் தெரிவிக்கும் பொருட்டு வாயைத்திறப்பதற்குள் டீச்சர் தொடர்ந்தாள். “அதற்கு பிறகு ஓவிய வகுப்பில் நடந்த கதை. நான் குழந்தைகளை ஜப்பானின் தேசியக்கொடியை வரையுங்கள் எனக் கேட்டுக்கொண்டேன். ஏனைய எல்லோரும் சரியாக வரைந்தார்கள். ஆனால் உங்கள் மகளோ கப்பற்படையின் கொடியை வரைய ஆரம்பித்தாள்.அதுதான் உங்களுக்கு தெரியுமே ஒளிக்கற்றையுடன் கூடிய அந்தக்கொடி. அதில் கூடத்தப்பில்லை என்றுதான் நினைத்தேன். ஆனால் அதனைச்சுற்றி போடர் வரைய ஆரம்பித்துவிட்டாள். எனவே போடர் வரைய பேப்பரில் இடம் போதாமையினால் அது பேப்பருக்கு வெளியிலும் படிந்து மேசை முழுவதும் மஞ்சள் கறை படிந்து விட்டது. டீச்சர் மிகவும் களைப்படைந்து சொல்லிக்கொண்டே போனாள்.

பிறகு டீச்சர் எழுந்து பிரியப்போகும் தொனியில் “ நான் மட்டும்தான் அவளால் நம்பிக்கை இழந்த ஒருத்தி என்றில்லை. பக்கத்து அறையிலுள்ள வகுப்பு டீச்சரும் அவளால் தொந்தரவு அடைந்தவர்கள் தான்” என்றாள்.

அம்மா வெளிப்படையாகவே இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும். இவையெல்லாம் அடுத்த குழந்தைகளுக்கு நல்லதில்லை. தனது சிறுகுழந்தையை புரிந்து கொண்டு மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை அவளுக்கு கற்றுத்தரக் கூடிய வேறு பள்ளியை அம்மா கண்டு பிடித்தாக வேண்டிய நிலையில் இருந்தாள்.



பெரிய எழுத்துக்களில் பள்ளியின் பெயர் எழுதப்பட்ட அழகிய தூண்களில் இருந்தது. ஆனால் இந்தப்புதிய பள்ளியின் கேற் இலைகளும் இளந்தளிர்களும் உடைய சிறிய கம்பத்தில் இருந்தது.

இந்த கேற் வளர்ந்து கொண்டேயிருக்கும். டோட்டோ சான் சொன்னாள் இது டெலிபோன்கம்பங்களை விடவும் வளர்ந்து கொண்டே போகும் போல் உள்ளது. இரண்டு கேற் கம்பங்களும் உண்மையிலே வேர்களுடன் கூடிய மரங்கள் தான். அதன் அருகில் சென்று பள்ளியின் பெயரை படித்துவிட்டு அந்தப்பெயருக்கான விளக்கம் கேட்க அம்மாவிடம் திரும்பியவள் ஏதோ ஒன்றின் தெளிவற்ற காட்சியினால் பீடிக்கப்பட்டாள். அவள் தான் நிச்சயம் கனவுதான் காணவேண்டும் என நினைக்கும்படி அந்தக்காட்சி செய்துவிட்டது. அவள் இன்னும் உற்று நோக்கிப்பாரத்தாள். அவள் கண்களையே அவளால்நம்பமுடியவில்லை.

இப்போது அவர்கள் சென்று கொண்டிருக்கும் பள்ளி அம்மா அப்படி தேடிக்கண்டுபிடித்த ஒன்றுதான்.

அம்மா டோட்டோசானிடம் அவள் வெளியேற்றப்பட்டதாய் சொல்லவில்லை. டோட்டோ சானுக்கோ தான் என்ன தவறு செய்கிறோம் என புரியவில்லை என்பது தெரிந்திருந்ததாலும் அவளுக்கு எந்தவிதமான தாழ்வு மனப்பான்மையும் ஏற்படுவதை விரும்பாததாலும் டோட்டோ சான் வளரும்வரை அம்மா இவை எதையும் அவளிடம் சொல்ல வேண்டாம் என முடிவெடுத்தாள். அம்மா சொன்னது எல்லாம் இதுதான். புது ஸ்கூலுக்கு போவது உனக்கு பிடிச்சிருக்கா? நான் இது ரொம்ப நல்ல ஸ்கூல் என்று கேள்விப்பட்டேன்"

எனக்கு பிடிச்சிருக்கு என்ற டோட்டோசான் சிறிது நேரம் யோசித்துவிட்டு சொன்னாள். "ஆனால்...."

என்ன ஆனால் ஒருவேளை தான் வெளியேற்றப்பட்டதை அவள் புரிந்து கொண்டாளா?" என அம்மா நினைத்தாள்.

ஆனால் ஒரு கணம் கழித்து டோட்டோசான் மிகவும் சந்தோசமாக வினாவினாள். "வீதி இசைஞர்கள் இந்த புதிய பள்ளிக்கு வருவார்கள் இல்லையா அம்மா?

**புதிய பள்ளி**

புதிய பள்ளியின் கேற்றைப்பார்த்ததுமே, டோட்டோசான் நின்று விட்டாள். அவள் போய்க்கொண்டிருந்த பழையபள்ளியின் கேற்

"அம்மா இது உண்மையிலேயே ரயில்தானா? அதே ஸ்கூல் மைதானத்தில்.."

அந்தப்பள்ளி தனது வகுப்பறைக்காக ஆறு கைவிடப்பட்ட ரயில்களை பயன்படுத்தியது. கனவில் கண்ட ஒன்றாகத்தான் டோட்டோசானுக்கு அது தெரிந்தது. ஹய்யோ ரயிலில் ஒரு ஸ்கூல்" ரயில்வே கார்களின் ஜன்னல்கள் சூரிய வெளிச்சத்தில் மிளிர்ந்தன.

நான் இந்தப்பள்ளியை விரும்புகிறேன்.

ஒரு கணம் கழித்து சந்தோசக்கூச்சலிட்டுக்கொண்டே டோட்டோசான் ரயில் பள்ளியை நோக்கி ஓட ஆரம்பித்தாள். வாம்மா சீக்கிரம் நாம் அப்படியே நிற்கும் அந்த ரயில்களுக்குள் போவோம். வியந்து போன அம்மா அவள் பின்னாடியே ஓட ஆரம்பித்தாள். அம்மா ஒரு காலத்தில் கூடைப்பந்து அணியில் இருந்ததால் டோட்டோசானையும் விட வேகமாக ஓடி அவள் கதவை அடையும் முன்னர் அவள் சட்டையை பிடித்துவிட்டாள். அதற்குள் உள்ளே போகமுடியாது என்று அம்மா சொன்னாள். இந்த ரயில்வே கார்கள் தான் வகுப்பறைகள். இந்த ஸ்கூலில் நீ இன்னும் சேர்க்கப்படவே இல்லை. நீ உண்மையில் இந்த ரயிலுக்குள் போக நினைத்தால் ஹெட் மாஸ்டரிடம் நல்ல அமைதியாக நடந்துக்கணும் நாம் இப்ப அவரிடம்தான் போகிறோம். எல்லாம் ஒழுங்காக

நடந்தால் இந்தப்பள்ளியில் கண்டிப்பாக இடம் கிடைக்கும். என்ன உனக்கு சொல்வதெல்லாம் புரிகிறதா?

ரயிலுக்குள் போகவேண்டும் என்றால் அம்மா சொல்வதன்படியே நடந்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

சரிம்மா என்றாள். அதன் பிறகு நான் இந்த ஸ்கூலை விரும்புகிறேன் அம்மா" என்று சேர்த்து சொன்னாள்.

உனக்கு பள்ளி பிடிக்கிறதா என்பது பிரச்சினையில்லை. தலைமை ஆசிரியருக்கு உன்னை பிடிக்கிறதா என்பதுதான் பிரச்சினை என்று அம்மா டோட்டோசானிடம் சொல்ல நினைத்தாள். ஆனால் அப்படி செய்யாமல் பிடித்திருந்த டோட்டோசானின் சட்டையை விட்டு அவள் கையைப்பிடித்துக் கொண்டு தலைமை ஆசிரியர் அலுவலகத்தை நோக்கி நடந்தாள்.



சுவர்களுக்கு பதில் பள்ளி மலர்களினால் சூழப்பட்ட மைதானத்தைக் கொண்டிருந்தது. மைதானம் சிவப்பு மஞ்சள் மலர்ப்படுக்கையாக விரிந்து கிடந்தது.

தலைமை ஆசிரியரின் அலுவலகம் ரயில்வே கார்களில் அமைந்திருக்கவில்லை. கேட்டிற்கு எதிரே அரைவட்ட விமானவடிவத்தில் உள்ள முதல் மாடிக்கட்டடத்தில் தலைமை ஆசிரியரின் அலுவலகம் இருந்தது.

தலைமை ஆசிரியரின் அலுவலகத்திற்கு அருகே சென்ற பின் டோட்டோசான் அம்மாவைத்திரும்பிப்பார்த்தாள். ஒருவேளை டோட்டோசான் பள்ளி பற்றிய தன் கருத்தை திடீரென மாற்றிவிட்டாளோ என்ற பயத்தில் அம்மா என்ன விடயம் என்றாள். அம்மாவின் காதுகளில் கிசுகிசுத்தாள். "நாம் பார்க்கப்போகும் ஆள் நிச்சயமாக ஸ்டேஷன் மாஸ்டராய்த்தான் இருக்க வேண்டும்." என்றாள்.

அம்மாவிற்கு நிரம்ப பொறுமை இருந்தது போல நகைச்சுவை உணர்வும் இருந்தது. அவள் தனது முகத்தை டோட்டோசானின் முகத்துக்கு அருகே வைத்து ஏன் என மெலிதான குரலில் கேட்டாள்.

நீங்க சொன்னீர்கள் இவர் ஹெட் மாஸ்டர்னு ஆனா இவ்வளவு ரயிலை சொந்தமாக வைத்திருப்பதால் அவர் கண்டிப்பாக ஸ்டேசன் மாஸ்டர்தான் என்றாள்.

பழைய ரயில்வே கார்களை வைத்துக்கொண்டு பள்ளியை நடத்துவது வழக்கத்தில் இல்லா ஒன்றாகையால் அம்மாவும் ஒப்புக்கொண்டாள். அம்மா இதனை அவளிடம் எளிமையாக விளக்கினாள். உன் அப்பா என்ன செய்கிறார். அவர் வயலின் வாசிக்கிறார். அவரிடம் சொந்தமாக நிறைய வயலின் இருக்கிறது. அதனால் நம்ம வீட்டை ஒரு வயலின் கடை என கூறமுடியுமா?

ஆகவே ஆகாது என்று அம்மாவின் கையைப்பிடித்துக்கொண்டே டோட்டோசான் ஒப்புக்கொண்டாள்.

**தலைமை ஆசிரியர்**

அம்மாவும் டோட்டோசானும் உள்ளே சென்றனர்.அலுவலகத்தில் இருந்த அதிபர் நாற்காலியில் இருந்து எழுந்து நின்றார். டோட்டோசான் அவரைப்பார்த்து தலை வணங்கிவிட்டு மிகவும் உற்சாகத்துடன் அவரைப்பார்த்து நீங்கள் யார்? ஸ்ரேஷன் மாஸ்டரா? அல்லது ஸ்கூல் மாஸ்டரா என வினாவினாள்.

அம்மா சங்கடப்பட்டு போனாள். ஆனால் ஹெட்மாஸ்டரோ சிரித்துக்கொண்டே பதிலளித்தார். நான் இந்த ஸ்கூலின் ஹெட்மாஸ்டர்."

டோட்டோசான் மிகவும் சந்தோசத்துடன் எனக்கு ரொம்ப சந்தோசம். நான் உங்களிடம் ஒரு சலுகை கேட்கப் போகிறேன். நான் உங்கள் ஸ்கூலுக்கு வர விரும்புகிறேன் என்றாள்.

தலைமை ஆசிரியர் அவளுக்கு ஒரு நாற்காலியை எடுத்துக்கொடுத்துவிட்டு அம்மா பக்கம் திரும்பினார். "நீங்க இனி வீட்டுக்கு போக விரும்பினால் போகலாம். நான் டோட்டோசானிடம் பேசவிரும்புகிறேன். என்றார்

(தொடரும்)

## அன்பான வாசகர்கர்களே,

எமது கடந்த மாத இதழின் வருமானத்தினூடாக போரில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விக்குரிய உதவித்தொகையாக 30000/= வழங்கியிருந்தோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். போரில் பாதிக்கப்பட்ட பல மாணவர்கள் கல்விக்கான உதவிகளின்றி வாழ்கின்றார்கள். எமது சஞ்சிகையுடன் தொடர்பு கொண்டு அவ்வாறான மாணவர்களுக்கு உதவி செய்ய விரும்புபவர்கள் தமது உதவிகளை நேரடியாகச் செய்ய முடியும்.

இந்த இதழினூடாக பெர்ணான்டோ அன்ரனி கலைமாறன் என்பவர் தன்னால் இயன்ற உதவியை நேரடியாகச் செய்திருந்தார். அவருக்கு எமது சஞ்சிகையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## மாணவர்களுக்கான போட்டிகள்

**1.** 

சோபனா தர்மராஜா நினைவாக நடாத்தப்படும் கவிதைப்போட்டி

**விழ விழ எழுவோம்**



**2.** மயில்வாகனம் வனிதாராணி நினைவாக நடாத்தப்படும் கட்டுரைப்போட்டி

**பசுமையான சூழலின் இன்றைய பரிதாப நிலை**

**3.** 

அன்ரனி பெர்னாண்டோ விஜயராணி நினைவாக நடாத்தப்படும் சிறுகதைப்போட்டி

**நன்றி மறவாமை**

மாணவர்களே,

மேற்படி ஒவ்வொரு போட்டிகளிலும் வெற்றியீட்டும் மாணவர்களில் முதல் மூன்று பேருக்கு ஒவ்வொரு இதழினூடாகவும் பணப்பரிசில் வழங்கப்படும். நீங்கள் அனுப்பும் ஆக்கத்துடன் பின்வரும் விண்ணப்பபடிவத்தையும் பூர்த்தி செய்து அனுப்புங்கள்

பெயர் :-..........................................................................................

முகவரி :-..........................................................................................

பாடசாலையின் பெயர் :-..........................................................................................

தொலைபேசி இலக்கம் :-..........................................................................................

**முதல் பரிசு-750/= இரண்டாம் பரிசு-500/= மூன்றாம் பரிசு- 250/=**

# துளசி மாடம்

251, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி இல: 021 222 5967











போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பாக
துளசி மாடத்திற்கு நன்றிகளைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.